1279

…red No. M. 1500. "NAVASAKTI"

நவசக்தி

திங்கள் வெளியீடு

'எவ்வுயிர்க்கும் அன்பாயிரு' 'என்கடன் பணிசெய்து கிடப்பதே'

சிலம்பு ௧௫ 1933௵ மே௴ பரல் ௭

உள்ளுறை

	பக்கம்
பூஞ்சோலை விலாசம்	... ௩௩௧
சமரச சன்மார்க்க போதம் ...	... ௩௩௨
நமது சிந்தனை	... ௩௩௭
கடவுளுடன் ஒன்றுபடுதல்	... ௩௪௨
விசித்திரமான ஒரு பந்தயம்	... ௩௪௭
கமலநாதன்	... ௩௫௪
சுந்தர சுலோசனை	... ௩௫௮
உடல் நுட்பம்	... ௩௬௧
கற்றவர் மடமை	... ௩௬௫
இடியேறு	... ௩௬௯

வருடசந்தா

உள்நாடு ரூபா 3-8-0. வெளிநாடு ரூபா 4.

சத்தியம் விளங்க வேண்டுமா?

வெள்ளம் வருதற்கு முன்பே
அணைகோலிக் கொள்வது நல்லது

உங்கள் எதிர்கால நிலையைத் தெரிந்து கொண்டால் அதற்குத் தக்கபடி வாழ்வை ஒழுங்குபடுத்திக் கொள்ளுதல் கூடும்.

திருமணப் பொருத்த நிமித்தம் சிறப்பாகத் தெரிந்து கொள்ளுங்கள். கீழ்வரும் விலாசத்துக்கு எழுதுங்கள்; அல்லது நேரே வாருங்கள்.

பிறந்த வருடம் மாதம் தேதி மணி இடம் முதலியவற்றைச் சரியாகக் குறித்தனுப்புங்கள்.

ஒருபாவம் முற்றிலுஞ் சொல்ல ரூபா 10; ஒரு ஜாதகத்தின் பொதுப் பலன் கூற ரூபா 10; ஒரு ஜாதகக் குறிப்பு மட்டும் எழுத ரூபா 2; குறை விசயங்களை உரைக்க ரூபா 2.

C. T. கிருஷ்ணசாமி,
38, வயித்தியநாத முதலி தெரு, சென்னை.

அரிய தமிழ் நூல்கள்

	ரூ.	அ.
கந்தபுராணச் சுருக்கம் (மூலமும் பொழிப்புரையும் விருத்தியும்)....	3	0
முருகவேள் பனுவல் திரட்டு	1	0
திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் முதல் திருமுறை (அரும்பத வுரையும் சரித்திரக் குறிப்பும்)	0	12
முருகன் திருவருட்பா	0	8
தேவி தோத்திர மஞ்சரி	0	4
குசேலோபாக்கியானம் (மூலமும் அரும்பத உரையும்)	1	4
விநாயகர் பனுவல் திரட்டு	0	6
திருப்போரூர்ச் சந்நிதிமுறைத் திரட்டும், அரும்பத உரையும்		
கிளேஸ்	0	5
ஷெ ரப்	0	3
சிவபுண்ணியத் தெளிவு	0	3
காரைக்காலம்மையார் பதிகங்கள் (திரு. வி. க.) அரும்பதக் குறிப்புரையுடன்	0	6

திரு அருட்பா - பாலகிருஷ்ணபிள்ளை பதிப்பு.

சுவாமிகள் கையெழுத்தைக்கொண்டு பிழை களையப்பட்ட சுத்த பாடமுள்ளது.
அதன விஷயங்களும் ஆராய்ச்சிக் குறிப்புகளும் நிறைந்தது.

6-வது தனிப்பாசுரப் பகுதி - அடக்கவிலை அணா 5.
(பல மத ஸ்தோத்திரங்கள் - கலியுகக் கோலம் - குடும்ப கோஷம்)

திருவாசகம் மூலமும் உரையும் விலை ரூபா 3.

முருகவேள் புத்தகசாலை,
12, கணபதிமுதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

நவசக்தி

'எவ்வுயிர்க்கும் அன்பாயிரு' 'என்கடன் பணிசெய்து கிடப்பதே'

சிலம்பு ௯ ஸ்ரீமுக௵ வைகாசி௴ பரல் ௭

பூகோள விலாசம்

(தொடர்ச்சி)

பேர்சித்த சித்திதனும் பின்கிழக்குச் சித்திரையி
லேர்தரும் புருகா ரதரிருப்பர்—நேர்கிழக்கு
மிக்காய் திருமதையில் வீற்றிருப்பர் குய்யகர்தாந்
தக்கபுகழ்ச் சோமனுக்குத் தான்கிழக்குத்—தாக்கமிலாச்
சித்தபதி யென்னுந் திருநகரிற் புட்பகமும்
வைத்த விருநிதியு மாடிருப்பச்—சத்ருக
வாகனத்தான் செங்கலொளிர் வாகனத்தான் போலவுமவ்
வாகனத்தா னத்தன த னங்குறைவன்—மாகனகம்
போன்ற நகர்க்குணபாற் பொற்குசையா மப்பதியி
லென்றதில தேவதைக ளோயிருப்பர்—தோன்றமிதன்
நேர்கிழக்குச் சித்தி சிக்ஷித்தி வாயுவெனுந்
சார்நகரின் மேகவண்ணன் றனுறைவன்—பாரிடந்தும்
ஈசானர் வாழு மிடத்தெதிருந் தென்றிசையிற்
றேசார் பதுமபுரி சேர்ந்திருக்கும்—பேசுமதின்
வேதனினி திருப்பன் விட்டிடையின் றெற்காகச்
சோதிதருங் காமச் சசுவதியிற்—கோதில்
அசுவனி தேமா வாவா ரதன்றென் றிசையின்
றிசையில்மக மேருபுரி சேருங்—கெசமுகமும்
ஐந்து கரமுமதி லங்குசமும் பாசமுடன்
முந்துமிடக் கோடிருகை மோதகமும்—வந்தவிழி
மூன்று மிருசெவியு மும்மதமு நால்வாயுந்
தோன்று மிருபதமுந் தோன்றமுகில்—போன்றுருகு
வாகனமு முன்னிருக்க மன்னுமரி யாசனத்தில்
மேகநிக ரைங்கரனும் வீற்றிருப்பன்—தோகையரோ
அப்பொருப்பி னுப்ப னளவீரெண் ணாயிரமா
மொப்பில் மதிறைநிபா மோர்நகரின்—பொற்புடைய
மண்டபத்திற் பொற்ற மணைப்பொருட்டின் வாணியொடும்
புண்டரிகத் தேவன் புகழ்ந்திருப்பன்—ஒண்டொடியீர்
இந்நகரி மேற்கிரே மூாயிர யோசனைத்தாய்
மன்னுமொரு வைகுண்ட மாநகராம்—பொன்னு
மரதனமுஞ் சேர்ந்திலங்கு மாடக்கான் மாடத்

றாக வணைமிசையி னோங்குஞ்—சுரிகுழலார்
பூமடந்தை யோடும் புயல்வண்ணன் வீற்றிருப்ப
னாமடந்தை கேள்வனுறை நன்னகர்க்குத்—தாமெதிரக்
கீட்டிசையி னீரயுதங் கிண்மே லயுதமுமாய்
வாட்டமில்லாப் பல்கோடி மார்த்தாண்டர்—கூட்டியபொற்
கண்கவருஞ் சோதிக் கதிரெறிக்கு மண்டபமும்
விண்டடருங் கோபுரமு மீயுயர்ந்து—பண்டமரும்
வன்னச் சிகரமுமேல் வைத்தொளிர்பொற் றாவியுமுன்
மின்னுகொடிக் கம்பமதன் மேல்விடையும்—பொன்னின்
திருமதில்க ளோரேழுஞ் சேர்ந்தபிர கார
மருவுமதிற் கோடிகான மாட—மருகெங்குஞ்
சிங்கார மாகச் சிறக்கு மசோவதியின்
சங்காரைங் கையன் சதுமுகத்தோன்—மங்காத
திக்கதிபர் மாமுனிவர் தேவர்வித்தி யாதார்கள்
தக்க வசுக்களெண்மர் சாரணர்கள்—மிக்கான

(தொடரும்)

சமரச சன்மார்க்க போதம்

(தொடர்ச்சி)

19. மக்கள், தங்களுக்குக் கீழ்ப்பட்டுள்ள அஃறிணை உயிர்களின் வளர்ச்சிக்குத் துணை நிற்றல்வேண்டும். இஃது இயற்கை அறம்.

20. அஃறிணை உயிர்களும் படிப்படியாக வளர்ந்து பகுத்தறிவுடைய மக்களாதல்வேண்டும். அவைகளை வளரவொண்ணாதவாறு அவைகட்கு இடையூறு செய்தல் பெரும்பாவம்.

21. அஃறிணை உயிர்களின் வளர்ச்சிக்குக் கேடு சூழ்வோரின் வளர்ச்சியும் தடைப்படுதல் இயல்பு.

22. ஒருயிர்க்குத் தீங்கு செய்வது, தன்னுயிர்க்குத் தானே தீங்கு செய்வதாகும்.

23. எல்லா உயிர்களையும் தன்னைப் போல் கருதி வாழ்வது சிறந்த இயற்கை வாழ்வாகும்.

24. மேலே கூறப்பெற்ற நான்கு இனத்தவர்கட்கும் அமைப்புவேண்டுமா வேண்டாமா என்பது ஒரு கேள்வி.

25. முதல் இனத்தவர்கள் குருமார்களுடன் தொடர்பு கொண்டு வாழ்தலின், அவர்களைப்பற்றி ஒன்றுங் கூற வேண்டுவதில்லை.

26. குருமார்களுடன் தொடர்பு கொண்டவர் இன்னார் என்று எப்படி உணர்வது? குருமார்களுடன் தொடர்பு கொண்டவர்களிடம் சிற்சில சிறப்பியல்புகள் அமைந்திருக்கும். அவைகளை விரித்தல் இயலாது. சிலவற்றைமட்டும் சொல்லுதல் கூடும். அவை, தமக்கென ஒன்றின்மை, பிறர்க்கென வாழ்தல், பெரிதும் மலையில் வாழ்தல், சூரிய ஒளியிலுள்ள பிராண சக்தியைக் காற்று வாயிலாக எளிதில் பருகி நாடி நரம்புகளுக்கேற்றல், நரை திரை மூப்பு அணுகாமை, பிறர் நோய்களைத் தியானத்தாலோ, நோக்காலோ, பரிசத்தாலோ போக்கல், இன்ன பிற. இவ்வியல்புகளுடையவர்கள் குருமார்களுடன் தொடர்பு கொண்டவர்கள் என்று உணர்தல் வேண்டும்.

27. அமைப்புகள் பலவிதம். அவைகளைப் பணிக்குரிய அமைப்புகளென்

றும், தியானத்துக்குரிய அமைப்புகளென்றும் இருகூறு படுத்திக்கொள்ளலாம்.

28. பணி அமைப்புகள் பின் மூன்றினத்தார்க்கும் பொது. அவைகள் வாயிலாக உயிர்த்தொண்டு நிகழ்ந்து வரும்.

29. பணி அமைப்புகளாவன: பள்ளிக்கூடம், தொழிற்சாலை, வயித்திய சாலை முதலிய அறச் சாலைகள்.

30. தியான அமைப்பு முறையில் மூவருள்ளும் வேற்றுமையுண்டு.

31. இரண்டாம் இனத்தவர்க்குரிய தியான அமைப்புகள் இயற்கையின் கோலங்கள்.

32. மூன்றாம் இனத்தவர்க்குத் தியான அமைப்புகள் கலைகள்.

33. நான்காம்இனத்தவர்கட்குவேறு வித அமைப்புகள் தேவை. அவை கோயில், மடம், சபை போன்றன.

34. இவ்வினத்தவர்கள் சமரச சன்மார்க்க உணர்வு அரும்பப் பெறாதவர்களாதலின், அவர்கள் நெஞ்சில் பன்மையுணர்வு மிகுந்து விளங்குதல் இயல்பு. அவர்களின் பன்மை யுணர்வைப் படிப்படியாக ஒருமைப்படுத்த மற்றவர்கள் முயலுதல் வேண்டும்.

35. இவர்கள், தங்கள் பன்மையுணர்வுக் கேற்றவாறு பல திறக் கொள்கையுடையவர்களா யிருப்பார்கள். இவர்கள் வழியே சென்று இவர்களைத் திருத்துவது நலம்.

36. இவர்கள் தங்கள் கொள்கைக்கு (மதத்துக்கு) ஏற்றவாறு அமைப்புகளை ஏற்படுத்திக் கொள்வார்கள். தொடக்கத்தில் எவர் எவர் எந்த எந்தக் கொள்கையில் பற்றுள்ளங் கொள்கிறாரோ அவர் அவர் அந்த அந்த அமைப்பில் சேர்ந்து ஒழுகலாம்.

37. ஒருவர் அமைப்புமீது மற்றொருவர் பகைமை கொள்ளாதிருக்குமாறு அவர்கட்குப் படிப்படியாக அறிவு கொளுத்த வேண்டுவது சன்மார்க்கத் தெளிவுடையார் கடன்.

38. பின்னே ஒருவர் கொள்கையை மற்றொருவர் கொள்கையுடன் நடுநிலையில் நின்று சீர்தூக்கிப் பார்க்குமாறு அவர்கட்குப் போதிக்கவேண்டும்.

39. நாளடைவில் தங்கள் கொள்கையே மற்றவர் கொள்கையாகப்பரிணமித்திருப்பது போல அவர்கட்குத் தோன்றும். அவ்வேளையில் அவர்களிடம் பன்மை யுணர்வுமாய்வதற்கும், ஒருமையுணர்வு அரும்புவதற்கும் இயற்கை அன்னை அருள் செய்வாள்.

40. சன்மார்க்கத் தெளிவுடையார், நான்காம் இனத்தவர்களின் பலதிறப்பட்ட அமைப்புகளிலும் ஈடுபட்டுக் காட்டுதல் வேண்டும். இவ்வீடுபாடு, எல்லாக் கொள்கைகளும் சன்மார்க்கம் ஒன்றையே குறிக்கொண்டு நிற்பன என்பதை, ஒருமை உணர்வு இல்லாதவர்கட்கு அறிவுறுத்தும்.

41. நான்காம் இனத்தவர் அமைப்புகளின் பெயர்கள் பலபடத் திகழ்கின்றன. அப்பெயர்களை மாற்ற வேண்டுவது அநாவசியம். வெறும் பெயர் மாற்றத்தால் ஒன்றும் விளையாது. உள்ள பெயராலேயே அவ்வவ்வமைப்புகள் நடைபெற்று வரலாம். ஆனால் அவைகளில் சமரச சன்மார்க்கக் கொள்கை படிப்படியே இடம் பெறச் செய்தல் வேண்டும். உடல் எதுவாயினுமாக. அதனுள் சன்மார்க்க உயிர் நிலவுதல் வேண்டும்.

42. எவ்வமைப்பும் இல்லாத இடங்களில் புதிதாகச் சமரச சன்மார்க்கப் பெயரால் ஓர் அமைப்பு உண்டாக்கலாம். அதற்கென நிதியுஞ்சேர்க்கலாம். செலவுபோக மிகுதியுள்ளதைப் பணி அமைப்புக்கு உதவிவிடுதல் வேண்டும்.

43. நான்காம் இனத்தவர்கட்கு, ஆடல், பாடல், கூத்து, உலா, விழா முதலியவற்றில் வேட்கை நிகழ்தல் இயல்பு. அவைகளை மறுத்தல் கூடாது. மறுப்பால் நலன் விளையாது. 'சமரச சன்மார்க்க சங்கத் தத்துவம் அமையும் முறையில் அவைகளை நடாத்திக் காட்ட வேண்டுவது அறிஞர் கடமை.

44. நான்காம் இனத்தவர் வழியே சென்று, அவர்களை நல்வழியில் திருத்தல்வேண்டும்; அவர்கள் எளிதில் எதற்கும் இணங்கிவரும் இயல்புடையவர்கள்.

45. நான்காம் இனத் தவர்களின் தியான அமைப்புகள் மிக எச்சரிக்கையாக நடத்தப்பெறல் வேண்டும். அவைகளில் பிணக்கு பிளவு முதலியன நிகழ்தல் ஆகாது.

46. பிணக்கு பிளவுகளைத் தோற்றுவிக்கும் பேய்கள் பல உண்டு. அவைகளில் சிறப்பாகக் குறிக்கத்தக்கன இரண்டு. ஒன்று தேர்தல்; மற்றொன்று நிதி.

47. பிளவு பிணக்குகள் நிகழாத முறையில் தேர்தல் நடைபெறுதல் சிறப்பு. அவைகள் நிகழ்வதாயின், தேர்தல் முறையை அறவே விட்டுவிடுதல் நல்லது.

48. நிதியுள்ள இடத்தில் பெரிதும் நீதி இருப்பதில்லை.

49. தியான அமைப்புகட்கு நிதி அநாவசியம். அவசியம் நேரின் வேண்டும் அளவில் நிதி திரட்டலாம். குறிப்பிட்ட ஒன்றற்குப் பயன்பட்டதுபோக மிகுந்துநிற்பதைப் பணிஅமைப்புகட்கு உதவிவிடுதல் வேண்டும்.

50. தியான அமைப்புகள் தூய்மைக்கும் ஒழுக்கத்துக்கும் நிலைக்களனாக இருத்தல் வேண்டும். இவைகட்குக் கேடு நிகழும்போதெல்லாம் அமைப்புகள் சீர்திருத்தஞ் செய்யப்பெறல் வேண்டும்.

51. பிளவு பிணக்குகள் நிகழும் வேளைகளில் அவைகளை மேலும் மேலும் வளர்க்கமுயல்வது தவறு. தியானத்தில் அமர்ந்தால் எல்லாம் ஒழுங்குபட்டுவிடும். இயற்கை - இறைத் தியானம் நலனே செய்யுந் தன்மையது.

52. ஒவ்வொருவரும் தம்தம் குறைபாடுகளை உணர்ந்து இயற்கை - இறையைத் தியானிப்பது நல்லது.

53. குறைபாடுகளை நினைந்துநினைந்து கசிந்து கசிந்து உருகி அழுவது, இயற்கை - இறையின் அருளைப் பெறுதற்கு வழி தேடுவதாகும்.

54. குறைகளை உணர்ந்து, அவைகளைப் போக்க முயல்கிறவன், சன்மார்க்கத்தில் நிற்க முயல்பவனாவன்.

55. தன் குற்றத்தை உணர்கிறவன், பிறர் குற்றத்தை நாடான்

56. பிறர், தங்குற்றத்தை யுணர்ந்து வருந்தும்போது, அக்குற்றத்தை மன்னிக்கும் மனம் பெறுதல் வேண்டும். அம்மனம் சன்மார்க்கத்தில் ஈடுபடுவதாகும்.

57. ஒவ்வொரு குடும்பமும் சன்மார்க்க சங்கமாகத் திகழ அறிஞர்கள் முயல்வது அழகு. இதற்குச் சன்மார்க்கக் கல்விச்சாலைகள் பெருகுதல் வேண்டும்.

58. தொகையில் நான்காம் இனத்தவரே பெருகியிருக்கிறார். இத்தொகை சுருங்கி, மற்றவர் தொகை பெருகின், உலகில் பலதிறத் துன்பங்கள் நீங்கும். இது சன்மார்க்கர்கள் தொண்டைப் பொறுத்திருப்பது.

59. சன்மார்க்கத் தொண்டர்கள், சன்மார்க்க சங்க நோக்கங்களைப் பரப்ப முயன்ற வண்ணமா யிருப்பார்களாக.

VII இறுவாய்

1. சத்தெனும் இறை ஒன்றே.

2. இறைக்கு உடல் இயற்கை.

3. இறை அப்பன்; இயற்கை அன்னை.

4. இயற்கை கடந்த இறை நிலையை மன வுணர்வுடையோர் ஆராய வேண்டுவது அநாவசியம்.

5. மனவுணர்வுடையோர், இயற்கை-இறையை வழிபடும் அளவில் நிற்பது ஒழுங்கு.

6. சத்தெனும் இறையை அடைதற்குரிய மார்க்கம் இயற்கை.

7. இறைவனை அடைதற்கு, இயற்கை இன்பத்தைத் வெறுத்துக் காட்டுக் கோடி, மூச்சைப் பிடித்தல் வேண்டுமென்று நினைப்பது தவறு.

8. இயற்கை நெறி, இறை நெறியாதலான், இயற்கை இன்பத்தை வெறுப்பது இறை இன்பத்தை வெறுப்பதாகும்.

9. பெண் ஆணுடனும், ஆண் பெண்ணுடனும் வாழ்வது இயற்கை.

10. பெண் ஆணை வெறுப்பதும், ஆண் பெண்ணை வெறுப்பதும் துறவென்று சொல்லப்படுவது தவறு.

11. தீய குணங்களை நீப்பது துறவு.

12. பெண்ணும் ஆணும் சம உரிமையுடையவர்கள்.

13. ஒருவன் ஒருத்தியுடனும், ஒருத்தி ஒருவனுடனும் வாழ்வது அறம்.

14. இயற்கை வழி நின்று, உடலோம்பிக், கல்வி பயின்று, இயல்புக்குரிய தொழின் முறைகளில் ஈடுபட்டு, இல்லற மேற்று, இயற்கைத் தியானத்தில் பயிற்சி பெறுதல், இறை வழிபாடாகும்.

15. இயற்கை நெறி நிற்பது இறை நெறி நிற்பதாகும். இதுவே சமயம் என்பது.

16. சமயங்கள் பல இல்லை. உள்ள சமயம் ஒன்றே. அது சன்மார்க்கம்.

17. இயற்கைத் தியான முதிர்ச்சியால் குருதரிசனம் பெறலாம்.

18. குருமார்கள் மக்களுமல்ல; கடவுளுமல்ல. மக்கள் கடவுளை அடைவதற்கு அவர்கள் துணை செய்பவர்கள்.

19. குருமார்கள் நெஞ்சத்தாமரையில் என்றும் இறையொளி திகழ்ந்த வண்ணமாயிருக்கும். அவர்கள் நுண்ணுடலுடையவர்கள்; பொன்மேனியர்கள்; இயற்கைத் தியான முதியோர்கட்கு நலஞ் செய்பவர்கள்.

20. சடங்குகள் செய்து, காசு பறிப்பவர்கள் குருமார்களல்ல; அவர்கள் புரோகிதர்கள்.

21. புரோகித மதங்கள் பலப்பல. அவைகள் வேறு; சன்மார்க்கம் வேறு. இரண்டுக்குந் தொடர்பில்லை.

22. சன்மார்க்கம் எல்லார்க்கும் உரியது.

23. சன்மார்க்கத்துக்குச் சாதி நிறம் மொழி. நாடு முதலிய வேற்றுமைகளில்லை.

24. சாதி நிறம் மொழி நாடு முதலிய வேற்றுமை புணர்வைக் கலப்பு மணம் ஒழிப்பதாகும்.

25. பிறப்பில் உயர்வு தாழ்வு கருதுவது அஞ்ஞானம்.

26. மக்கள் அனைவருஞ் சகோதரர்கள்.

27. எல்லா உயிர்களிலும் வீற்றிருப்பது சத்தெனும் இறை ஒன்றே. அவ்வுண்மையை உணர உணரச் சகோதர நேயம் பெருகும்.

28. கர்மம், நாள், கோள் முதலியன சன்மார்க்கர்களைத் தாக்குவதில்லை.

29. அறிவில் மேம்பட்டவர்கள், அறிவில் கீழ்ப்பட்டவர்களை உயர்த்தத் தொண்டு செய்தல் வேண்டும்.

30. தொண்டு உயிர்கட்கு அழகு.

31. உயிர்களுக்குத் தொண்டு செய்வது கடவுளுக்குத் தொண்டு செய்வதாகும்.

32. சமரச சன்மார்க்க சங்கம் இறை முதல் எல்லா உயிர்களையும் அங்கமாகக் கொண்டது. ஆகவே எல்லா உயிரும் சகோதரர்கள்.

33. எல்லா உயிர்களையும் சகோதரர்களாகப் பார்ப்பவர் சன்மார்க்கராவர்.

34. இயற்கையை உடலாக்கொண்டு, என்றும் மாறுதலின்றி, எங்கும் நீக்கமற நிறைந்து நிற்கும் ஒன்றாய், அறிவாய், அன்பாய், இன்பாய், அழகாய் உள்ள இறை வாழ்க.

35. இறைக்கு உடலாய்நின்று, திருவிளையாடல் புரியும் இயற்கை வாழ்க.

36. இயற்கை - இறைவழி நின்று, உலகை நடாத்திவருங் குருமார்கள் வாழ்க.

37. காலதேச வர்த்தமான நிலைக்கு ஏற்றவாறு, அவ்வப்போது குருமார்கள் வழிப் பிறந்த அருள் மொழிகள் வாழ்க.

38. அருள் மொழிகளின் பொருளாயுள்ள சமரச சன்மார்க்கம் வாழ்க.

39. சமரச சன்மார்க்க சங்கம் வாழ்க.

VIII கலம்பகம்

[இப்போதும் நூலாகும்போது கீழ் வருவன ஆங்காங்கே பொருந்திய இடங்களிற் சேர்க்கப்படும்.]

1. உணர்வு பல திறத்தது. அது, கண் உணர்வு என்றும், காது உணர்வு என்றும், மூக்கு உணர்வு என்றும், நா உணர்வு என்றும், உடல் உணர்வு என்றும், மன உணர்வு என்றும் பலபட்டு நிற்பது.

2. கண்முதலிய உணர்வுகட்கு அடிப்படை மன உணர்வு.

3. மனம் வெளிமனம் என்றும், உள் மனம் என்றும் இருவகைப்படும்.

4. வெளி மனம் உருவங்களைக் கொள்ளவல்ல தென்றும், உள் மனம் உருவங் கடந்தவைகளைக் கொள்ளவல்ல தென்றும், சாதாரண உலகஞ் சொல்வது வழக்கம்; மற்ற உலகம் அங்ஙனங் கொள்வதில்லை.

5. உருவங்களில் பருமை நுண்மை உண்டு. பருமை உருவங்கள் கண்ணுக்குப் புலனாவன; நுண்மை உருவங்கள் கண்ணுக்குப் புலனாகாதன.

6. பருமை உருவங்களைக் கொள்வது வெளிமனம்; நுண்மை உருவங்களைக் கொள்வது உள்மனம்.

7. நுண்ணுருவம், அருவம் என்று சொல்லப்படும்.

8. அருவம் உருவ மற்றதன்று. அருவம் கண்ணுக்குப் புலனாகாமையால், அதை உருவ மற்றதென்று சொல்வது தவறு. அருவம் கண்ணுக்குப் புலனாகாத நுண்ணுருவ முடையது.

9. அருவம் எண்ணம் போன்றது. எண்ணத்துக்கும் உருவம் உண்டு என்பது மனோதத்துவ நூலார் துணிபு.

10. சத்து உருவ அருவங்களில் கலந்து விளங்கி, அவைகட்கு மேலும் தனித்து விளங்குவது.

11. உருவ அருவ நிலைகளைக் கடந்து விளங்குந் தனி இறை இருவித மனவுணர்வுக்கும் எட்டாதது.

12. இருவித மன வுணர்வையும் பொதுவாக மனவுணர்வு என்று கொள்ளலாம்.

13. மன வுணர்வுக்கும் மேற்பட்ட நிலைகள் பல உண்டு.

14. இயற்கைக்கும் - இறைக்கும் உள்ள பிரிவற்ற தொடர்பைக்கொண்டு, இறையை, இயற்கை - இறை என்று சொல்லலாம்.

15. இறை உயிராய், இயற்கையில் எங்கும் நீக்கமற நிற்றலான், இயற்கை உடல் இயங்கித் தன் கடனாற்றுகிறது. இயற்கையின் இயக்கத்தைச் சிந்திக்கச் சிந்திக்க இறை உண்மையை உணரலாம்.

16. 'இறை உயிர்; இயற்கை உடல்' என்னும் எண்ணத்துடன் இயற்கை வழி நிற்போரும், அவ்வெண்ண மின்றி இயற்கை வழி நிற்போரும் செயலில் ஒருமைப்பாடுடையவர். செயலில் ஒருமைப் பாடுடையவர்கள் ஒருவரோடொருவர் பிணங்க வேண்டுவதில்லை.

17. 'இறை உண்டு' என்பது ஆத்திக மென்றும், 'இறை இல்லை' என்பது நாத்திக மென்றும் சொல்லப் படுகின்றன. இறை உண்டு இல்லை என்னும் வாய்ப்பேச்சைக் கொண்டு ஆத்திக நாத்திக நிலையை அளந்து கூறுதல் இய

லாது. இயற்கை நெறி நிற்றல் நில்லாமை என்னுஞ் செயலைப் பொறுத்து ஆத்திக நாத்திக நிலை நிற்பது.

18. இயற்கையோடியைந்த வாழ்வு என்பது உயிர்கள் வழிபாட்டையும் உடன்கொண்டது.

19. சத்தினைத் தனிப்படுத்தி மனவுணர்வால் ஆராய்ந்து ஆராய்ந்து காலம் போக்காது, அந்தச் சத்தினை அடைதற்குரிய மார்க்கத்தில் நின்றொழுகுவது சிறப்பு.

20. சத்தினை அடைதற்குரிய மார்க்கம் எது?

திரு. வி. கலியாணசுந்தரன்.

(தொடரும்)

நமது சிந்தனை

[திரு. சி. சதாசிவனார்]

IV

சுகம்

உடம்பா ரழியில் உயிரா ரழிவர்
திடம்பட மெஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாய மறிந்தே
உடம்பைவளர்த்தேன் உயிர்வளர்த் தேனே.

இத்திருவாக்கு நமது யாக்கையின் அருஞ்சிறப்பை வலியுறுத்துகின்றதாகும். உயிர்சிறத்தற்கும், உண்மையறிவு ஒளிர்தற்கும் உடலம் அவசியம் வேண்டற்பாலது. இவ்வுலகு, அனுபவ வாயிலாக, மக்களது அறிவைத் துலக்கி வளர்க்கும் ஒரு கல்விச் சாலையாகும். இச்சாலையில் யாக்கை எனுஞ் சட்டை புனைந்தே மனிதர் பயில இயலும். ஈண்டுப் பிறவாமல் மகன் சிறக்கமுடியாது. ஆக, உயிர்கூர்தற்கு மெய் அதிக ஆக்கம் அளிக்கின்றது என்பது அறிந்தோர் அறை. பிறப்பின் நலத்தைக் குறைவறப் பெறுதற்குச் சரீரம் நன்னிலையிலிருத்தல் மிக அவசியம் என்பது வெளிப்படை.

இன்னும் இவ்வவனி நாட்கள் இனிதே கழிதற்கும் உடல் நலன் வேண்டும். பிணியாற் பிடிக்கப்பட்ட மகன் யாதும் இயற்ற இயலாது ஏமாற்றமடைந்து, பிணமென இயங்குவதைக் கண் கூடாகக் காண்கின்றோம். நோயாளனுக்கு அகம் புறம் இரண்டினும் அடைதற்குரிய இன்பு, அநுபவம் இன்னவை இல்லையாகும். சிறையுண்ட நீரென அவன் முதிர்ச்சியடையாது கட்டுண்டு உழிதருபவனாவன். அறவழி பொருளீட்டி, இன்ப வீடடைதற்கு அருந்துணை செயும் இச்சுகம் மக்கள் எல்லோர்மாட்டும் நிலவுகின்றதா? இம்மைப் பயன்றுய்த்தற்கும், மறுமைப் பேறு சிறத்தற்கும் இன்றியமையாத சுகம் எத்தனை பெயரிடம் காணப்படுகின்றது என்று விரல்களால் எண்ணிவிடலாம். உலகில் மிகமிகச் சிறுபான்மையோரே நல்ல இரும்புடல் பெற்றுப் பிணியின்றி வதிகின்றனர். நாம் எப்பக்கம் திரும்பினும் நோயையும் பேயையே மிகையாகக் காண்கின்றோமல்லவா?

உலகம் தோன்றிய நாள்முதலாக நோய்கள் இருந்து வருகின்றன. இப்போது அவை அதிகம் என்று சிறப்பாகக் கூறலாம். இடம், காலம், நடப்புகட்குகந்தவாறு புதிது புதிதாகப் பிணிகள் கிளைக்கின்றன. இவைகளைக் களைய ஆக்கப்படும் அவிழ்தங்களோ எண்ணிலடங்கா. மண்பதையில் அளவிறந்த, மருத்துவத்திற் றேர்ந்த நிபுணர்கள், இரசாயன சாலைகளில், அல்லும் பகலும் ஒழிவின்றித் தமது மண்டைகளை உடைத்துக் கொண்டு, நோய்களைச் சன்னல் பின்னலாக வெட்டிச் சோதித்து, அவைகளை யடக்கும் மருந்துகள் பல

கண்டு பிடித்து, மக்களுக்கு அளித்துக் கொண்டேயிருக்கிறார்கள். எலிகளையும் முயல்களையும் பிடித்து, அவைகட்கு முதலில் நோயைப் புகட்டி, பின் இவர்கள் கண்டு பிடித்த அவிழ்தங்களையும் அருத்தி, அவை சுகமடைதலைக் கண்டானந்தித்து, இந்நோய்க்கு இது கைகண்ட மருந்து என்று முத்திரை இடுகிறார்கள். சற்று காலத்திற்குப் பின் இம்மருந்துகளிலும் சிறு குறைகள் இருப்பதாக அனுபவத்தால் ஏற்பட, வேறு பல அவிழ்தங்கள் வெளி வருகின்றன. எத்தனை மாற்று நஞ்சுகள், எத்தனை டானிக்குகள் ஆவணங்களிற் குவிந்திருக்கக் காண்கின்றோம்? எத்தனைவித வைத்திய முறைகள்? அல்லோபதி, ஹோமியோபதி, பயோகெமிக், ஆயுர்வேதம், யுநானி, மாந்திரீக ஔஷதம், இன்னும் எவ்வளவு வேண்டும். இவைகளாலாய பயனென்?

நோய்மட்டும் அருகுவதாகத் தோன்றவில்லை. மருந்துண்டு ஒரு நோய் தீர்ந்ததும், வேறொன்று புதிதாகத் தோன்றி ஒறுக்கின்றது. அது அடங்கியதும் இன்னும் ஒன்று ஒன்று ஒன்றுஎனக் கிளைத்துக்கொண்டே செல்கின்றன. நோய் பெருக மருந்தும், மருந்து பெருக நோயும், ஒன்றற்கொன்று காரணமாகி வளர்கின்றன. பிணிதீர மருந்து விழுங்கும் பழக்கமுடையோர் தாமிறக்கும் வரை மருந்தைத் தின்றுகொண்டே இருக்க வேண்டியதுதான்; அவர்களது பிணிமட்டும் ஒழிவதில்லை.

மருத்துவர் கைபிடித்து நாடிபார்த்தும், கருவிகொண்டு துடித்தல் சோதித்தும், இரத்தப் பரிசிலனைகள் செய்தும், எக்ரேயின் உதவியால் உட்கருவிகளைக் கண்டும் நோய்க்குக் காரணத்தைக் கண்டு விட்டதாக மதித்து, அகமலர்கின்றனர். குருதியின் சுத்தம், இருதய ஓட்டை, எலும்புருக்கிப் பூச்சி எனச் சொல்லி அவைகளைப் போக்க மாற்றுக் கொடுக்கின்றனர். அந்நோய் சிறுபோது தணிந்து நிற்கின்றது; பின் அதுவேயோ, அல்லது வேறொன்றோ கிளைத்து, இன்னும் அதிக கடுமையாக வாட்டி, அல்லல் விளைக்கின்றது.

குருதிக்கேடு ஆதியன நோய்க்குக் காரணமாகா. இவை பிணிக்காதையின் முதல் அத்தியாயமாகலாம். இரத்தம் கெடுவதால் நோய்கள் பல எழலாம். குருதிக்கு உடம்பை வளர்க்கும் ஆற்றலும் பிணிவர வொட்டாது தடுக்கும் வன்மையும் இருக்கின்றன. இது கெட்டுப் போனபோது வளர்ச்சிகுன்றி பிணியும் கடிதில் பற்றுகின்றது. இஃது இவ்விதம் உலர்வதற்குக் காரணங்கள் பல. நோய்க்கு இரத்தத்தீங்கு ஆயவை தாமே முதற் காரணமல்ல.

உடம்பைக் காக்கும் இந்நீர், நாம் அருந்தும் ஊண், பருகும் நீர், உயிர்க்கும் கால் இவைகளினது ஆக்கம், நாம் உபயோகிக்கும் உணவு தண்ணீர், காற்று இவை இருக்கும் விதம் நமது விருப்பத்தைப் பொருத்ததாகும். நமது விழைவும் மனதில் எழுகின்றது. சித்தத்துளைவர் தீய செய்வினை பலவும் செய்ய, மறுகும் உள்ளம் ஈர்த்த போக்கில் நாம் ஒழுகும்போது, உடம்பிற்குத் தக்கனவும் தகாதனவும் குடரிற் புகுந்து, சரிவரக் கரையாது, புளிப்பேறி, உள்ளேயே நாட்படத் தேங்கி, செந்நீரை விடமாக்கி, அகக் கருவிகளையும் பாழாக்கும். இப்பிசகினால் வரும் நோய்கட்குக் காரணம் மனம், மனமே என்று சொல்லாமல் உணர்ந்து கொள்ளலாம். பிணி வந்துற்றபோது மருந்துதின்று, குணமாகும் வரை பத்தியங் கிடந்து, சுகமடைந்தும், முன் பழக்கங்களைப் பற்றி நடந்தால், சிறிது காலந்தாழ்த்து அந்நோய் திரும்பவந்து கலக்குகின்றது. மன நோக்கத்தை - விருப்பத்தைத் திருப்பாத எந்த அவிழ்தமும் பயனற்றதென்பது இதனால் அறியக் கிடக்கின்றது.

சுகத்திற்கு அடிப்படைக் காரணம் மனமாகும். மனதில் நினைத்தபடி நமது உடம்பு மலர்கின்றது. மனம் நோயுற்றிருந்தால் உடம்பும் கெடும். அதில் எழும் கோளாறுகளை நீக்கினால் மட்டுமே பிணி அழியும்; ஆதி காரணமாய மனஎழுச்சி

களுக்கு வழி செய்யாது, அதன் விகாசமாகியமெய்க்கு ஒட்டுப்போடுவது பனிநீராற் பறவை பணிக்கப் பாவிப்ப தொக்கும். மனதின் நீழலே மெய். மனதை அமைவாகஅமைத்தால் அதன் நீழல் அதுவே அந்தமடையும்.

மனதில் எழும் நெகிழ்ச்சிகள் அதி லூறும் பிணிகள் - இவை அனந்தம். காமம், குரோதம் இன்னபிற தீஎழுச்சி களான் உடல் கேடுறுகின்றது என் பதை மறுக்க இயலாது. காமத்தினல் வரும் பிணிகளைச் சொல்ல வேண்டு வதில்லை. கோபம் மிகுதலால் குருதி தலைக்கேறி, கண் சிவத்தல், பின்எரிச் சல், தலைவலி முதலியன உண்டாகின் றன. அடிக்கடி கோபம் எழுவதால், நாளடைவில் இரத்தம் கொதிப்பேறி, கெட்டுப் புளித்து, அதனல் வாதசம்பந் தமான நோய்கள் உண்டாகின்றன என்று அறிவுடையோர் அறைகின் றனர். கவலை எனும்பேய் வாய்ப்பட் டோர் இரவில் துயிலுவதில்லை. நெடு நாள் உறக்கங் கெட்டவன் நோய்வாய்ப் படுகின்றான். இச்சம்பவங்கள் மனதில் ஊறும் எழுச்சிகளாலும் நோய் வரலாம் என்பதை விளக்குவன.

விலங்கு மனதைத் திருப்திசெய்ய உண்ணும் தகாத உண்டி, மீதூண் இவைகளால் நோய் உண்டாகலாம். இரண்டாவது மனதில் எழும்பும் தீ எழுச்சிகள் பிணிகளைத் தரலாம். இன் னும் நாம் வழக்கமாக நோயைப் பற் றியே சிந்தித்துக் கொண்டிருப்பதும் பிணியை நல்கும். இது எப்படி என்று சிந்திப்போம்.

உடலம், மிகமிகச்சிறிய உயிரும் உணர்வு முடைய கண்ணறைகளின் கூட்டங்களால் ஆயது. இக்கண்ணறை கட்குத் (Cells) தாம் செய்யவேண்டிய தொழிலினது அறிவும், அதை நன்கு இயற்றவேண்டும் எனுமவாவும் இருக் கின்றன. மனித இயல்புகளாய அறிவு, ஞாபகம், பயம், ஆச்சரியம் ஆகிய உணர்ச்சிகளும் இவைகள் மாட்டு உள். இவ்வீட்டங்கள் நமது மனதிற்கு - சித் தத்திற்கு அடங்கித் தொழிற் படுகின் றன. இச்சங்கத்திற்குச் சித்தம் தலைமை. அகக்கருவிகள் யாவும் இக்கண்ணறை களால் ஆக்கப்பட்டிருப்பதால், அவை கட்கும் சித்தமே தலைமையாகும்.

இன்னும் இது உடலுள் இருக்கும் நீர் நிலைகளையும் அடக்கித் தொழிற் படுத்துகின்றது. பெரியபலகையொன் றைத் தராசுபோல் சமன்செய்து, அதன்மேல் ஒரு மனிதனைச் சமமாகப் படுக்க வைத்து, அவனைத் தன்கால் களைப்பற்றிச் சிந்தனை செய்யச்சொல்ல, அதிக இரத்தம் கால்களுக்கு ஓடி அப் பக்கம்கனத்து, பலகை சாய்ந்ததையும், தலையை நினைத்துச் சிந்திக்கக் கூறிய போது, தலைப்பக்கம் கனத்து அப்பக் கம் பலகை சாய்ந்ததையும் கண்டு சித் தம் உடம்பிலுள்ள நீரோட்டத்தையும் அடக்குகின்றது என ஆராய்ச்சிசெய் வோர் நிறுவி இருக்கின்றனர்.

இவ்வுள்ளம் தனது உணர்ச்சியால் புறமனதின் உதவியின்றி - மிகச் சிக்க லான தனது கடமையை - உட்கருவி களாற்றும் தொழிலைக் கண் காணிப்ப தைச் செய்யா நிற்கின்றது. நாம் முயற் சியிலீடுபடும்போது, உடம்பு பிரதிகண மும் தேய்ந்து கேடுற்றுக் கொண்டும், பின் ஓய்வு எடுத்துக் கொள்ளும்போது அழிந்தபாகம் மறுபடியும் புதிதாக உண்டாகிக் கொண்டும் இருக்கின்றது. உடல் வண்ண நூற்கள் எழுவருடத்துக் கொருமுறை தேகம் முற்றிலும் புதி தாக ஆகிவிடுகின்றது எனக் கூறி வந் தன. இப்போது, இன்னும் விரைவாக உடல் மாறிவிடுகின்றது என்று ஆராய்ச் சியால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. தேய்ந்த பாகங்களை - கெட்ட உறுப்பு களை - புதுப்பித்து ஒழுங்குபடுத்தும் வேலைகளை எல்லாம் சித்தம் கவனித்துக் கொள்கின்றது. தலைவன் எவ்விதம் இருக்கின்றானே அவ்விதமே கீழ் ஆட் களும் இருப்பதியற்கை. சித்தம் எந் நிலையி லிருக்கின்றதோ அந்நிலையில் தேகமும் ஆகின்றது.

புறமனமில்லாமலே உள்வேலைகளைச் சித்தம் கவனித்துக் கொண்டிருந்தா லும், புறமனதில் எழும் எண்ணங்கள்-

எழுச்சிகள் சித்தத்தைத் தனது கடமையினின்றும் பிறழச் செய்கின்றன. புறமன மடங்கியவனது உள்ளமே தனது கடமையை ஒழுங்காய்ச் செயும் திறனுடைத்து. விழிப்பில் நாம் என்ன வழக்கமாய் உடலைப்பற்றி எண்ணுகின்றோமோ அது சித்தத்திலுறைந்து உடம்பிலு முறைக்கின்றது. நோயைப் பற்றியே நாம் சந்ததமும் நினைத்துக் கொண்டிருந்தால் நோயையே எங்கும் காண்போம். இதனின்றும் - நமது ஞாபகமே உடம்பை ஆக்கும் சக்தி என்பது போதரும். முன் நினைத்த நினைப்புகளின் பயனாக இப்போது சுகத்தையோ, அல்லது பிணியையோ அடைகின்றோம். இனி நினைக்கும் நினைப்பால் வரும் நாட்களில் சுகமோ, பிணியோ அடைவோம்.

உடல் கண்ணறைகளா லாயது - இவை சித்தத்திற்கு அடங்கியவை; சித்தம் நமது எண்ணங்களால் மாறலாம். நாம் எண்ணத்தை அடக்குவதனால், சித்தத்தையும், கண்ணறைகளையும், உடம்பையும் வசப்படுத்தலாம். நமது வீட்டைச் சுத்தமாகவும், சுகமாகவும், அழகாகவும் அமைக்கலாம்.

"உறுகயி றூசல் போல
ஒன்றுவிட் டொன்று பற்றி
மறுகயி றூசல் போல
வந்து வந்துலவு நெஞ்சம்"

அடங்க - நமது நினைவு வழிப்பட - சுகம் அரும்பும்.

உறுதியுடன் நமது மனநோக்கத்தை மாற்றுதலால் - நல் எண்ணத்தால் - நெஞ்சறி வுறுத்தலால் நாம் நமது உள்ளத்தை அடக்க வேண்டும்; அதன் நோக்கத்தையும் மாற்றவேண்டும். அவ்விதம் மாற்றிச் செப்பனிட்ட பிறகு தான் நமதுடல், உண்மையில் நமதாகும். பிணியை நீக்க உடம்பில் மருந்தை ஏற்றுதலொழித்து, உடலின் முதலாய மனதிற்கு மருந்தூட்டுவது சாலச் சிறந்ததாகும். மத்துறு தயிர் போல் மருகும் சித்தத்தைத் திருத்திக் கருத்தினைச் செவ்வே நிறுத்துவதே சிறப்பளிக்கும்.

மனதை மாற்றும் சக்தி சிலருக்குத் திடீரென்று உண்டாதல் உண்டு. எதிர்பாராத ஒரு பெரிய நன்மை நோயாளிக்கு நேருமாகில், அதனால் ஏற்படும் இன்பு நல்கும் எழுச்சியினால், மனம் அதிர்ந்து, மாறி, அதன் பயனாக அவன் நன்மை அடையலாம். எதிர்பாராது ஏற்படும் ஒருபெரிய விபத்தினாலும் மனது குன்றி, அதுவே ஏக்கமாக் மனிதன் உயிர் நீத்தலும் உண்டு.

எண்ணங்களுக்கு அடிமையா யிருப்பவன் சுக்கானற்ற தோணியை ஒக்கின்றான். அது அலைகளால் அலைப்புண்டு, காற்று வீசிய பக்கமெல்லாம் ஓடி உழன்று, சுழல்களிற் சுழன்று, பாறைகளில் மோதி, உடைந்துபோகும். எண்ண அடக்கமற்றவன் பற்பலநினைப்புகளால் நலிந்து, மற்றவரது எண்ணங்களால் மெலிந்து, நோய்களாலுலர்ந்து அல்லல் அடைவான்.

இத்துன்பம் துடைத்து, உடல்நலனடைய அவா உடையோன் பிணி என்று ஒன்று இருக்கின்றது என்பதைஅறவே தனது ஞாபகத்தினின்றும் ஒழித்தல் வேண்டும். கவலை - பயம் - குரோதம் - விரோதம் இன்னபிற தீ எழுச்சிகளைத் தள்ளி, சுகத்தையே - நன்மையையே மனதில் பதித்தல் வேண்டும். முதலில் நாம் எவ்விதம் இருக்கவேண்டுமென்று விழைகின்றோமோ, அவ்வித நிலையை மனதில் இருத்தி அதைப்பற்றியே சதா சிந்தித்தல் வேண்டும். இச்சிந்தனை முதிர்ச்சியால் பிணி எண்ணம் இல்லாமலே ஒழிதல் கூடும். "ஆண்டவன் திட்டத்தில் பிணி என்பதே இல்லை. அவனது பெயர் துன்பக் கலப்பே இல்லாத சுகம், இன்பு, அன்பு, ஆதியன ஆகும். அவன் எங்கும் விரவி நிறைந்திருப்பதால் நாம் சுகக்கடலில் ஊறித் திளைத்துக் கிடக்கின்றோம். ஆகையால் நம்மிடம் பிணியே இல்லை. முன்செய் தீவினையால் இப்போது

நோயுற்றிருந்தாலும் இறைவன் நம்மைக் காப்பாற்றுகின்றான். எம் செயலாலாவது யாதொன்றும் மில்லை. எல்லாம் அவன் செயலே என்று உணரப் பெற்றோம்" என்று எப்போதும் தியானம் செய்துகொண்டு இருப்போமாயின், அவ்வித உணர்வு, நாம் தியானம் செய்வது உண்மை எனும் உணர்வு நமக்கு வந்துறும். அக்கால் ஈண்டுப் பிணியே இல்லை எனும் உண்மையை அநுபவமாக உணர்வோம்.

மருத்துவர்களிற் றலையாயவர் கடவுளே. அவருக்கு வைத்தியநாதர் என்று முன்னோர் இட்டிருக்கும் பெயரையும் கவனிக்க. அவர் சுகவாரி. யாவர் மாட்டும் இவ்வாரி இருக்கின்றது. நாம் இதை உணராததால் துன்பம் வருகின்றது. இதை உணர்ந்த மனம் ஒன்று "பிணியறியோம்" என்றது.

நமது வீடுகளில் யாராவது நோயுற்றிருந்தால், நிச்சயம் இறந்து படுவான் என்று கைவிட்ட நிலையில் இருக்கும் போது கடவுளை வேண்டிக் கொளவதுண்டு. இவ் வழக்கத்தை நாம் பரிகசிக்கின்றோம். ஆனால் உண்மை விசாரிக்கப்புகின், இஃது இவ்விதம் இகழத்தக்கதல்ல என்பது விளங்கும். ஆண்டவனை வேண்டிக் கொள்ளும்போது, நாம் நிலைமையை அப்படியே அவனிடம் ஒப்படைத்து "எங்களால் இவனைக் காப்பாற்ற இயலாது. தெய்வமே!என்செயல் உன்செயலே என்று உணரப் பெற்றோம். இவனைக் காப்பாற்று. உன்னால் இது முடியும்" என்று நினைப்பதாகும். அச்சமயத்தில் ஆண்டவன் உணர்வு சிறிது நம்மிடம் இருக்குமாகில், மயிர் சிலிர்க்கின்றது. இது ஆண்டவனது செயலே என்று அப்போது உணர்கின்றோமாக. சில தினங்களில் நோயாளி சௌகரியமும் அடைகின்றான். இந் நிகழ்ச்சி யாவருக்கும் சாதாரணமான தொன்றாக விருக்கலாம்.

சில தினங்கள் மட்டும் - சற்றுநேரம் மட்டும் அவனை நினைப்பதால் இந் நன்மை உண்டாகுமாகில், எந்நேரமும் நாம் அவனது அருளையே சிந்தித்திருந்தால் எத்தகைய நன்மைதான் உண்டாகாது என்று நாம் நன்றாகச் சிந்திக்கவேண்டும். "நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன். நினையாதொரு போதும் இருந்தறியேன்" என்று சொல்லத் தகுந்த பேற்றை நாம் எப்போது அடைகின்றோமோ அப்போது திண்ணமாகப் பிணி ஓடும்.

அவனன்றி ஒன்றில்லை என்றும், சுகவாரியில் அமிழ்ந்து, ஆழ்ந்து கிடக்கின்றோம் என்றும் நாம் சிந்தித்து அதே ஞாபகமாக ஒழுகுவதே நோய் போக்க நல்ல மருந்து. மருத்துவர்களிடம் அலைந்து அல்லற்படும் அவலம் மிச்சம். அவர்கட்குத் தரவேண்டிய பொருள் தேடுவதில் உண்டாகும் முயற்சி - காலம்-மிச்சம். இதிற் செலவு செய்யும் காலத்தில் நூற்றிலொருபங்கு ஆண்டவனைச் சிந்திப்பதிற் செலவு செய்தால் அடையும் நன்மையோ, மருத்துவர் நல்கும் நன்மையைவிட நூறுபங்கு அதிகமாகவே இருக்கும் என்பதிற் சிறிதும் ஐயமில்லை. திருநாவுக்கரையர் எவ்விதம் சுகமடைந்தார்? அவருண்ட அமுதம் என்ன? மற்றும் பல பெரியார் நோயுண்டவர்களை எவ்விதம் சுகப்படுத்தினர்? அவர் கண்ட அவிழ்தம் தான் என்ன?

இப்பெரியார் சரிதம் வாசிப்பது, இவர்களது அருள் வாக்குக்களை உணர்ந்தோதுவது, உன்னுவது, இவர்கள் கையாண்ட வழிகளைப் பின்பற்றுவது ஆதியன நமது சித்தத்தைத் தெளிவிக்கும். இதோடுகூட, நாம் ஒவ்வொரு நாளும் குறித்த காலத்தில் தவறாது செய்யும் தியானத்தால் நமது மனதைச் செம்மைப் படுத்தலாம். அது அந்தமாகியபோது,

"சித்தத் தருகிச் சிவனெம்
பிரானென்று சிந்தையுள்ளே
பித்துப் பெருகப் பிதற்றுகின்
றார்பிணி தீர்த்தருளாய்"

"துன்பக் கடலிடைத் தோணித்
தொழில் பூண்ட தொண்டர் தம்மை
இன்பக் கரைமுகந் தேற்றுந் திறத்தன"

"பிணியுடை யாக்கை தன்னைப்
பிறப்பறுத் துய்ய வேண்டி
பணியுடைத் தொழில்கள் பூண்டு
பத்தர்கள் பற்றினுலே"

இவை போன்ற அருள் மொழிகள் உண்மை என நாம் உணர்ச்சி யடைவோம்.

நாம் அவனியில் அடையும் சுகத்திற்கும் "சித்தத் தெளிதல்" காரணமாகும்.

கடவுளுடன் ஒன்றுபடுதல்

[குமரதாசன்]

சென்ற மார்ச்சு 'நவசக்தி'யில் 'ஐக்கியம்' என்ற தலைப்பின் கீழ் 'நோன்பி' வெளியிட்டிருக்கும் கட்டுரையில் கடவுளுடன் இரண்டறக் கலந்த நிலைமையின் தன்மையையும், அதை எவ்வாறு அடையக்கூடும் என்பதையும் அனேக மேற்கோள்கள் கொண்டு அருமையாக விளக்கியிருக்கின்றனர். கடவுளாகிய பரவெளியில் நம்மனம் கலப்பதுதான் ஐக்கிய நிலையென்பதையும், ஓங்கார அணைமீதேயிருந்து, தன் இதயத்திலேயே கடவுளோடுசீவன் ஒன்றுபடும் என்பதையும், அப்போது சீவனுடைய அகங்காரமும் மனமும் இறந்துபட்டு அது பரமுத்தியை அடைந்து, சிவபோத ஐக்கிய நிலையில் அமர்ந்திருக்கிறதென்பதையும் 'நோன்பி' நன்கு விளக்கியிருக்கின்றனர்.

யோகாப் பியாசங்களில் ஓங்கார சிந்தனை, தியானம் முதலிய முறைகளைப் பற்றி மனதைத் தன்வயமாக்கி, உருவ மனத்தையும் அருவ மனத்தையும் நீக்கிச் சீவன் பரமுத்தியை அடையக் கூடும். ஆகையால் மேற்சொன்ன அப்பியாசங்களைக் கைக்கொள்ள வேண்டியது அவசியமென்று சாஸ்திர ஆராய்ச்சி வல்லுனர் எல்லோரும் உரைப்பர் என்பது வெள்ளிடைமலை. ஆயினும் மன்பதையில் பெரும்பாலோர் எந் நெறியைக் கைக்கொள்ள வேண்டும்? மேற்சொன்ன அப்பியாசங்களைச் செய்ய அவர்களுக்கு அவகாசமும், போதுமான கல்விப் பயிற்சியும், யோகாப்பியாசங்களில் நழுவி விழாமல் தடுக்க இடையறாது குருமார்களின்பாது காப்பும் இல்லாததனால் அவர்கள் கடவுளுடன் ஒருமைப்பாடடைய எந்தப் பயிற்சியைப் பயிலவேண்டும் என்கிற விஷயமே நமக்கு மிகவும் அத்யாவசியமான தொன்றும்.

விகாச முறையில் விலங்கினத்தினின்று மனிதவர்க்கத்தை அடைந்த கீழான நிலைமை முதலாக முத்தி நிலைமையடைகிற பரியந்தமுள்ள மானிடவர்க்கத்தை ஐந்து வகைகளாக வகுக்கலாம். அவையாவன :—

(1) விலங்கினத்தின் ஆசைகளைத் தவிரவேறொரு நோக்கமுமின்றி விவேக சூன்யராய், எவ்வழியிலும் ஆசைகளைப் பூர்த்திசெய்ய அஞ்சாது வாழ்க்கை நடத்தும் மக்கள் ;

(2) சற்று நாகரிகமடைந்து பெரும்பாலும் சிற்றின்ப நோக்கத்திலேயே ஊக்கம் வைத்து ஏகதேசம் துன்மார்க்கங்களைத் தவிர்த்து வாழ்க்கை நடாத்துபவர்கள் ;

(3) பெரும்பாலும் சுயநல நோக்கங்கள் இருப்பினும், சிற்றின்ப ஆசைகள் சற்றுகுறையக் கிஞ்சித்துப் பிறருக்கு அநுகூலமாகவும் சிறிது கலைகள் பயிற்சியுடனும் உண்மை ஞானத்தில் சிற்சில சமயங்களில் சற்று வேட்கையும் உள்ளவர்களாய் இவைகளுக்கேற்ப மத்திய

மான கடவுள் வழிபாட்டையும் கைப்பற்றி வாழ்பவர்கள்;

(4) கடவுள் ஞானம் அல்லது வித்தகத்திலேயே அநேகமாய் முற்றிலும் ஆசைவைத்து, உலகவாழ்க்கையி லிருந்தாலும் சிற்றின்ப நோக்கம் அநேகமாய் நழுவிவிட உலக சம்பந்தமான வியவஹாரங்களையும் ஆன்மா கடவுளை அடைய வேண்டிய செந்நெறிக்கு முரணாகாத முறையிலேயே பெரும்பாலும் நடத்திக்கொண்டு,

“ எத்துணையும் பேதமுறா தெவ்வுயிருந்
தம்முயிர்போல் எண்ணி யுள்ளே
ஒத்துரிமை யுடையவராய் உவக்கின்றார்
யாவர் அவர் உளந்தான்,
சுத்தசித் துருவாய்எம்பெருமான் நடம்புரியும்
இடமெனநான் தெரிந்தேன் அந்த,
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடஎன்
சிந்தைமிக விழைந்த தாலோ ”

என்ற இராமலிங்க சுவாமிகளின் திருவாக்குப்படி ஒரு குருநாதனுடைய கடாட்சம் எப்போது கிட்டும் என்கிற அவா சதாமனதில் குடிகொண்டிருக்க, அவன் நோக்கம் சிற்சில சமயம் அவர் பால் விழ, சன்மார்க்க வாழ்க்கை நடாத்துபவர்கள். சில சடினமான சமயங்களில் கடவுள் குருநாதன் மூலமாக இவர்களுக்கு அறிவு புகட்டுவார்; ஆபத்துகளினின்றும் நீக்கவும் செய்வார். இவ்வமயங்களில் இவ்வுதவியைப் பெறுகிறோமென்கிறவிடயம் இவர்கள் மனத்தில் படாமலேயே இருக்கலாம். ஒருகால் தெரிந்தும் பெறலாம்;

(5) ஒரு குருநாதனுடைய கடாட்சத்தைத் தெளிவாகப்பெற்று அவன்கையில் ஒரு கருவிபோன்று உழைக்கச் சதா பிரயத்தனம்செய்துகொண்டு, சிற்சில சமயம் தவறினாலும் நாளடைவில் அந்நிலையில் தவறாது நின்று தமக்கென வாழாது குருநாதன் முறையிலேயே பிறர்க்குரியாளராய் உடல் பொருள் ஆவியெல்லாம் கடவுளுக்குரியவை, அல்லது குருநாதனுக்கே சொந்தமானவை என்ற பூரண எண்ணத்துடனும் தம் ஆன்மா கடவுளுடன் இரண்டறக் கலந்த பேரானந்த நிலையை அடையக்கூடும் என்ற ஆழமான நம்பிக்கையுடனும் வாழ்பவர்கள். முன்வகுப்பார் போலல்லாது இவர்கள் கடவுள் கருணையையும், ஒளியையும், துணையையும் அடிக்கடி பற்பல சமயங்களில் பெருங்காரியங்களில் மாத்திரமின்றிச் சிறு விடயங்களிலுங் கூட அநுபவிப்பவர்கள். இங்கே பின்வரும் அருட்பாக்கள் சிந்திக்கற்பாலன :—

“ என்னுடைய எல்லாந்தன்
னருள்வடிவந் தனக்கே
எய்திடச்செய் திட்டருளி
என்னையும்உடன் இருத்தித்
தன்னுடைய எல்லாம்என்
னுள்ளகத்தே வைத்தத
தானும்உடன் இருந்தருளிக்
கலந்த பெருந்தகையே
அன்னையென் னுருயிரே
அப்பா என்னமுதே
ஆவாஎன் றெனைஆண்ட
தேவா மெய்ச்சிவமே
பொன்னுரும் பொதுவில்நடம்
புரிகின்ற அரசே
புண்ணியனே என்மொழிப்பூங்
கண்ணியும்ஏற் றருளே ”

“களித்தென துடம்பிற் புகுந்தனை
எனது கருத்திலே அமர்ந்தனை கனிந்தே
தெளித்த என்னறிவில் விளங்கினை உயிரிற்
சிறப்பினுற் கலந்தனை உள்ளந்
தளிர்த்திடச் சாகா வரங்கொடுத் தென்றுந்
தடைபடாச் சித்திக ளெல்லாம்
அளித்தனை எனக்கே நின்பெருங் கருணை
அடியன்மேல் வைத்த வாறென்னே.”

“பயத்தொ டொருபாற்
படுத்திருந்தேன் என்பால்
நயத்தோ டணைந்தே
நகைத்து—வயத்தாலே
தூக்கியெடுத் தெனைமேற்
றூழலிலே வைத்தனை நான்
பாக்கியவா னேனென்
பதிந்து.”

"என்னுளே அரும்பி என்னுளே மலர்ந்து
என்னுளே விரிந்த என்னுடை யன்பே
என்னுளே விளங்கி என்னுளே பழுத்து
என்னுளே கனிந்த என்னுடை யன்பே"

* * * *

"சித்திகளனைத்தையும் தெரிவித் தெனக்கே
சத்திய நிலைதனைத் தயவினிற் றந்தனை"

* * * *

"கட்டமுங் கழன்றேன் கவலைவிட் டொழிந்
கலக்கமுந் தீர்ந்தனன் பிறவிச் [தேன்
சட்டமுங் கிழித்தேன் தூக்கமுந் துறந்தேன்
சாவையும் நோவையுந் தவிர்ந்தேன்
சிட்டமு மடைந்தேன் சிற்சபை யுடையான்
செல்வமெய்ப் பிள்ளையென் றொருபேர்ப்
பட்டமுந் தரித்தேன் எனக்கிது போதும்
பண்ணிய தவம்பலித் ததுவே"

முடிவில் இவர்கள் கடவுளுடன் ஒன்றுபட்டு ரிஷிகள் முனிவர்கள் நிலைமையையடைந்து மானிடர்களுக்கு ஈஸ்வர சங்கல்பத்தில் நிச்சயம் பண்ணப்பட்டிருக்கும் பேரானந்த முத்தி நிலையை அடைவார்கள். இவ் வகுப்புகளில் ஒவ்வொன்றிலிருக்கும்மனிதர்கள் அதற்கு மேற்படிக்குச் செல்வதற்கு வேண்டிய முறைகளை அவர்களுக்குப் பரோபகார சிந்தையுள்ள அறிவாளிகள் சொல்லி உதவவேண்டும். அதுவன்றி அதிக மேம்பாடான சமீபத்திற் கிட்டாத உன்னத நெறிகளையோ அப்பியாசங்களையோ முறை தவறி வற்புறுத்துவதால் பயனில்லை; நன்மை விளையாது போவதுமன்றி தீமையும் விளையலாம். இவ்வாறு நோக்குங்கால் கடவுளுடன் ஒன்றுபடுதல் என்ற முறை, மேற்சொன்னவைகளில் முதல் மூன்று வகுப்பிலுள்ள மானிடர்களுக்குப் பொருந்தாத ஒன்று. ஐந்தாவது வகுப்பினர்கள் குருநாதர்களுடைய 'கடாட்சத்தைப் பெற்று அம் முனிவர்கள் கருணையில் திளைப்பவர்கள்; சதா அவர்களுடைய பார்வையிலிருந்து கொண்டு யோகாப்பியாசங்களையும் அபாயமின்றிப் பயிற்சி செய்து நன்னெறியில் வாழ்பவர்கள். தங்கள் மனமும் வாக்கும் செயலும் குருமார்களுடைய எண்ணங்களுடனும் வார்த்தைகளுடனும் செயல்களுடனும் ஒருமைப்பட்டு நிற்க வேண்டுமென்ற பிரயத்தனத்தில் அவர்கள் சதா ஈடுபடுவார்கள். குருமார்களோ கடவுளுடன் ஒன்றுபட்ட நிலையை அடைந்தவர்கள். ஆகையால் கடவுளுடன் ஒன்று படுவதற்கு இந்த வகுப்பினர் செவ்வனே முயற்சிப்பவர்களே. சாதாரண மத சம்பந்தமான கல்வி கேள்விகள் அவர்களுக்குத் தேவையில்லை.

நான்காவது வகுப்பினராகிய சன்மார்க்க நெறியில் நின்று கடவுள் வழிபாட்டையும் உலக வாழ்க்கையையும் ஒருங்கே நடத்த சதா முயற்சி செய்ய வேண்டிய மனிதர்களுக் குரித்தான முறையே இங்கு நாம் கவனிக்கற்பாலது.

இம்மக்கள் கடவுளுடன் ஒன்றுபட்ட நிலை எய்துவதற்காக யாது புரியவேண்டும் என்பதே நாம் ஆராயும் விடயம். பற்பல பகுதிகளாகவும் நுண்ணிதாகவும் இவ்விடயத்தை நோக்குங்கால் நம் அனுபவத்திற்கு அனுகூலமான வழிகள் தோன்றும். அவைகளைக் கடைப்பிடித்து நாம் நற்கதியின் மேற்படிகளில் செல்ல இயலும். அவற்றில் சில பகுதிகளை இங்கே ஆராய்வாம்.

தொழில் முறை

இப்போது நம் நினைவிலிருக்கும் மக்களில் துறவிகளானவரைத் தவிர அனேகமாய் எல்லோரும் தங்களுடையவும் தங்களைச் சேர்ந்தவர்களுடையவும் உணவு, உடை இருப்பிடம் முதலியவற்றைச் சேகரிப்பதின் நிமித்தம் ஏதாயினும் ஒரு தொழிலில் உழைக்கத் தங்களுடைய பெருங்காலத்தைச் செலவழிக்க வேண்டியவர்களாக வாழ்க்கை நடாத்துகின்றனர். ஆகையால் இவர்கள் கடவுளுடன் ஒன்றுபடப் பயிற்சி செய்வது எங்ஙனம்? இவர்களும் ஏதாவதாலொர் அப்பியாசத்தைக்கைக்கொண்டு கடவுளைச்சிந்தித்தல், ஜபித்தல்முதலிய வழியில் முயற்சி செய்யலாம். ஆயினும் தினசரி பகற் பொழுது முழுவதும்

மனம், வாக்கு, காயம் இவற்றால் புரியும் தொழில், கடவுளுடன் ஒன்றுபடும் முறைக்கு முரண்பட்டால் அரைமணி நேரம் செய்யும் தியானம், ஜபம், நம்மைக் கடவுளுடன் ஒன்றுபடச்செய்யும் முறையில், அதாவது சன்மார்க்கத்தில், நம்மை நிறுத்த எத்துணை பயன்படும்? ஆகையால் நாம் வஞ்சகமின்றிக் கடவுளுடன் ஒன்றுபடும் வழியில் செல்ல நமக்கு விருப்பமிருந்தால் நம் வயிற்றுப் பிழைப்புத் தொழிலையும் சன்மார்க்க நெறியாகவே கைக்கொள்ள வேண்டும். ஒரு தொழிலில் அமருமுன் அது கூடியவரை சன்மார்க்கத்துக்கு முரண்படாத தொழிலா என்று ஆலோசித்து அமர வேண்டும். அமர்ந்தபின் அதில் ஒவ்வொருநாளும் மனம், வாக்கு, காயம் மூன்றாலும் செய்பவைகளைக் கடவுளுக்கு அர்ப்பணம் செய்யக்கூடிய வகையில் செய்து கடவுளுடைய நோக்கத்தை ஒட்டியே கடமையைச் செலுத்தவேண்டும். வயிற்றுப் பிழைப்புத் தொழிலுக்கும், சமயாசார நெறிக்கும் சம்பந்தமில்லை யென்ற மடமையை ஒழிக்கவேண்டும். உலக வாழ்க்கையில் காணப்படும் தொழில்களில் அநேகமாய் எல்லாம் கடவுள் நோக்கம் நிறைவேற அவசியமானவையே என்ற அருமையான அறிவு குடிகொள்ளவேண்டும். ஓர் உதாரணமாகப் பத்திரிகை இலாகாவைக் குறிக்கலாம்; உன்னிப் பார்த்தால் ஒரு தினசரி பத்திரிகையின் மூலமாய் நல்லறிவு, தெய்வபக்தி, தேசபக்தி, பரோபகாரமான கைங்கரிய உழைப்பு, அழகுக் கலைகளில் ஈடுபடுதல் முதலிய அநேக முறைகளில் மக்கள் கடவுளுடைய நோக்கத்திற் கிணங்க நடப்பதற்கு எவ்வளவு உதவி புரியலாம் என்பது விளங்கும். அங்ஙனமாயின் கடவுளுடன் ஒன்றுபடும் நெறியில் பத்திரிகாசிரியர் நிற்கவில்லையா? அன்பு நெறிக்கு விரோதமான சாதிப் பிணக்கு, முதலிய பற்பல கொள்கைகளை சமயாசாரம் என்ற நோக்கமுடையவர்களாய்ச் சன்மார்க்கப் பற்று சற்றுமின்றி சடங்குகளை முக்கியமான கடவுள் வழிபாடென்றும் நம்பிய புன்னெறியில் ஈடுபட்டு அதற்கேற்ப உழைக்கும் ஒருவர் பிறரிடம் பொருளுதவி சற்றுமே எதிர்பாராதவராயினும் அவர் கடவுளுடன் ஒன்றுபடும் நெறியை யணுகினவரல்லர். மேற்சொன்ன பத்திரிகாசிரியர் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 1000 சம்பளம் பெற்றாயினும் பத்திரிகையை நன்னெறியில் நடத்துபவராயின் இவரே கடவுளுடன் ஒன்றுபடும் வழியில் நிற்பவர்; இவரே பக்தசிரோமணி; இவரே மஹாகர்மயோகி.

இல்லறம்

இல்லறத்தை நடத்தும் ஒருவனும் ஒருத்தியும், தாங்கள் ஆன்மாக்கள், கேவலம் தேகங்களல்லவென்றும், சன்மார்க்க நெறியில் நின்று தாங்கள் நாளடைவில் கடவுளுடன் ஒன்று படும் வழியில் செல்ல வேண்டியவர்களென்றும், ஆன்மாக்களாகிய தங்கள் மக்களும் அதே நோக்கத்தில் பயிலவேண்டுமாகையால் அவர்களுக்கு அளிக்கும் தேகப்பயிற்சி, கல்விப்பயிற்சி, ஒழுக்கப் பயிற்சி, தொழிற்பயிற்சி யாவற்றிலும் அவ்வவற்றிற் கிணங்கிய முறைகளில் மக்களை ஈடுபடச் செய்யவேண்டும் என்றும், தங்கள் ஊரிலும், நாட்டிலும், உலகத்திலும் பொதுமக்கள் நன்மைக்கான ஏற்பாடுகளுக்கு இல்லறத்தார் இயன்ற அளவு உதவிபுரிய வேண்டும் என்றும் சதா நினைவுகொண்டு வாழ்வாங்கு வாழ்பவராயின் அந்த ஒருவனும் ஒருத்தியும் செய்யும் காரியங்களெல்லாம் கடவுளுடன் ஒன்று படுதற்குதவும் வழியில் நிற்பவையே. துறவுச் சின்னங்கள் பூண்டு, நெற்றியில் வெண்ணீறு முதலியவற்றை ஆடம்பரமாகவே அணிந்து, அநுட்டானச் சடங்குகளை வெளிப் பார்வையில் முறையாகவே செய்தாலும், உலக ஆசைகள் உள்ளத்தினின்று அகலாமல், சன்மார்க்க நெறியில் தானும் மன்பதையும் நிற்க வேண்டுமே என்ற கவலையும் அதற்கேற்ற உழைப்பும் இல்லாமல் வீணர்களாய்த் திரியும் வேடதாரிகளை விட மேற்சொன்ன இல்லறத்தார் கட-

வருடன் ஒன்றுபடும் வழியில் நிற்பவர்களல்லவா ?

சமூக உழைப்பு

மனித சமூக நன்மைகளின் பொருட்டாக ஆசார சீர்திருத்த முறைகளிலும், இராஜாங்க சீர்திருத்த வகைகளிலும், கல்வி கேள்விகளில் தேர்ந்தவர்களும், செல்வர்களும் ஆகிய அநேகர் தலைவர்கள் நிலைமையிலிருந்து தேசக் கடனாற்றி வருகின்றனர். ஜன ஆட்சி பெருகிவரும் இக்காலத்தில் முற்காலங்களைவிட இம்மாதிரி பொதுஜன நன்மைக்கு உழைக்க மனிதர்கள் தேவையென்பது உள்ளங்கை நெல்லிக்கனி போன்றது. ஆயினும் இந்த முறைகளில் உழைக்கச் செல்பவர்கள், நன்னோக்கமும், பரோபகார சிந்தையும், தெளிந்த அறிவும் பெரும்பாலும் உடையவர்களாக இல்லையாயின், இவர்கள் உழைப்பு போலிச் சமூகஉழைப்பாகவும்,இவர்கள் ஆட்டின் தோலைப் போர்த்துத் திரியும் புலிகளுக்கொப்பானவரெனவும் கருதப்படுவார்கள். சமூகத் தலைவர்களாக முன்வருவோர்கள், கடவுளின் ஆஞ்ஞையாகிய பெருந்தேரை இழுத்து முடிவுக்குக் கொண்டுவரப் போகும் பாக்கியத்தைப் பெற்ற பெருஞ் சேவகர்களாகவும் தமக்கெனப் பிரதிபலனையும் கீர்த்தியையும் எதிர்பாராமல் தேரை இழுப்பதிலேயே ஆனந்தமடையும் மனப்பான்மையுடையவராயுமிருத்தல்வேண்டும். இராஜாங்கத்தில் மந்திரி நிலைமை முதலிய பதவிகிடைத்தால் அதைக்கடவுளின் பிரதிநிதி நிலைமை என்ற ஞாபகத்துடன், தனக்கென வாழாது பிறர்க்குரியாளராய், கிடைத்த பதவியின் கடமைகளைப்புரியவேண்டும் என்றகருத்து சதா மனதில் இருக்கப்பெற்றால் சமூக உழைப்பை எடுத்துக்கொள்பவர்கள் கடவுளுடன் ஒன்றுபடும் முறையில் நிற்பவர்களே. சாதாரண வாழ்க்கையில் இருந்தாலும் சன்மார்க்கத்தில் ஆற்றலுள்ள மனிதர்கள் எவ்வாறு கடவுளுடன் ஒன்றுபடும் வழிக்கிணங்க வாழ்க்கையை நடத்தக்கூடும் என்பது மேலே மூன்று தலைப்பில் சுருக்கமாய்க்காட்டப்பட்டது. இன்னும் அநேக உதாரணங்களைக்கொண்டு அதையே விரித்து விளக்கலாம். இக்கட்டுரையை இன்னும் பெருக்க மனமில்லாது நிறுத்துகிறேன்.

தோட்டிமுதல் தொண்டமான் வரை எந்தத் தொழிலில் அமர்வோரும், தாம் கொண்ட வேலை விவசாயத் தொழிலாயினும், உபாத்தியாயர்கடைமையாயினும், நியாயாதிபதி நிலைமையாயினும், எழுத்துக்கூலிப் பிழைப்பாயினும், சங்கீதம், சித்திரம் எழுதல் முதலிய அழகுக் கலைகளில் ஈடுபடுவதாயினும், வாணிபமாயினும் சுயநலமே பெரிதாகக் கருதாது கடவுள் கைங்கரியமாக நினைத்து கடவுளுடன் ஒன்று படுதல் என்னும் மேலான மலை உச்சியைப் பார்த்துக் கொண்டே அதையணுகும் வழியில் செல்கிறோமா என்ற ஆராய்ச்சியைச் சதா செய்துகொண்டு நடக்கப் பயிலுதல் அவசியம். இப்பயிற்சிக்குத் தேவையான உதவிகள் :—

சிறு சமயக்கல்வி, சத்சங்கம், தினசரி சற்றுநேரம் உள்ள ஆராய்ச்சி செய்தல், கடவுள் சந்நிதியில் தனக்குண்டாகும் இடையூறுகளையும், சந்தேகங்களையும் முறையிட்டு தெளிவுபெற முயற்சித்தல், சமயம் வாய்க்கும்போது சன்மார்க்க சம்பன்னர்களுடன் சம்பாஷித்து அவர்கள் சந்நிதியில் ஊக்கமும், தெளிவும் அடைதல் முதலியன. இம்முறைகள் அநேகமாய் எல்லோருக்கும் சுலபமானவையே ; யோகாப்பியாச முறைகள்போல் கடினமானவையல்ல.

'நவசக்தி'செய்துவரும் சன்மார்க்கத் தொண்டை ஒட்டினதாக எண்ணியே இக்கட்டுரையை நான் வரையத் துணிந்தேன். இதை வாசிப்போர்கள் மேற்கண்ட வழியில் அவர்கள் சிந்தனையைச் செலுத்தி எந்த நிலையில் இருப்போரும் அதற்கேற்ற சன்மார்க்க முறையைத் தெரிந்துகொண்டு கடவுளுடன் ஒன்றுபடுவதற் கேதுவான வழியில் தூய்மையுடனும் ஆற்றலுடனும் வாழக் கடவுள் அருள் புரிவாராக!

விந்தையான ஒரு பந்தயம்

ஓர் ஐரோப்பிய ஆசிரியர் கட்டுரையைத் தழுவியது

[திரு. B. N. ராஜன், B. A. Hons.]
(*Research Scholar, University of Madras*)

கார்த்திகை மாதத்தில் ஓரிரவு காரிருள் சூழ்ந்திருந்தது. கிழவரான செட்டியார், 15 வருஷங்களுக்கு முன் இதுபோன்ற ஒரு கார்த்திகை மாதத்திலே தாம் செய்த விருந்தைப் பற்றி நினைத்துக்கொண்டு தமது அறைக்குள் அங்கு மிங்கும் நடந்துகொண்டிருக்கிறார். அந்த விருந்துக்குப் பெரும்பெரும் அறிவாளிகளெல்லாம் வந்திருந்தார்கள். பற்பல விஷயங்களைப் பற்றி உரையாடினதிலே, மரண தண்டனையைப் பற்றியும் பேச்சு வந்தது. பண்டிதர்களும், பத்திரிகாசிரியர்களும் ஏராளமாக அடங்கியிருந்த அந்த விருந்தாளிகள் கூட்டத்தினுள்ளே பெரும்பாலோரும் மரண தண்டனையைக் கண்டித்துப் பேசினார்கள். மரண தண்டனை அநாகரிகமானதென்றும், ஒரு சிட்சை என்ற அளவில் அது எத்தகைய பயனுமற்றதென்றும், பெருங்குரூரமும் பாவமுமான செய்கையென்றும் அவர்கள் நிறுவினார்கள். அவர்களுள் சிலர் மரண தண்டனைக்குப் பதிலாக ஜீவாந்தர சிட்சை மேலானது என்றார்கள்.

"எனக்கு அப்படித் தோன்றவில்லை" என்றார் உண்டியல் வியாபாரியான நம் செட்டியார். "மரண தண்டனையிலோ, அல்லது ஜீவாந்தர சிட்சையிலோ— ஒன்றிலும் எனக்குச் சொந்த அநுபவம் கிடையாது. ஆனால் புத்தியைக் கொண்டு யோசித்து நடுவுநிலைமையாகப் பார்த்தால், மரண தண்டனையே ஜீவிய பரியந்தம் சிறைவைப்பை விட மேலானது என்பதுவிளங்கும். மரண தண்டனையானால் அந்தக்ஷணமே ஆள் மூர்ச்சையடைந்துவிடுகிறான். ஆனால் ஜீவிய பரியந்தம் சிறைவைப்பு என்றால், அது ஆளை வதைத்துக் கொல்லாமல் கொல்வதாகும். இருவரில் யார் நல்லவன்— ஒரு நிமிஷத்தில் ஒரே அடியாகக் கொல்கிறவனா, அல்லது வருஷக் கணக்காக உயிரைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சித்திரவதை செய்கிறவனா?"

"அவருக் கிவர்மே லொன்றுமில்லை. இரண்டு பேரும் கெட்டவர்கள் தான்" என்றார் மற்றொரு விருந்தாளி; ஏனென்றால் இரண்டு பேருடைய நோக்கமும் ஒன்றுதான்,—உயிரை எடுத்து விடுவது—அரசாங்கம் கடவுளல்ல. தான் விரும்பும்பொழுது தன்னால் திருப்பிக் கொடுக்க முடியாத வொன்றை எடுத்துக்கொள்ள அதற்கு உரிமை இல்லை.

அந்தக் கூட்டத்திலே ஒரு வக்கீலுமிருந்தார்; 25 வயதுள்ள இளைஞரவர். தம்முடைய கருத்து என்ன என்று கேட்டதற்கு அவர் சொல்வார்:

"மரண தண்டனையும் மரண பரியந்த சிறை வைப்புமாய இரண்டும் கெட்டனவே. ஆனால் நான் ஒரு பெரிய குற்றத்தைச் செய்வேனாயின், அதற்குத் தண்டனையாக 'இரண்டில் எதைப்பெறுகிறாய்' என்று என்னைக் கேட்டால், கட்டாயம் நான் சிறைத் தண்டனையையே விரும்புவேன். உயிர் அடியோடு போவதைவிட, எப்படியாவது ஒருவிதத்தில் உயிரோடிருப்பது மேலாகும்."

விஷயத்தைப் பற்றிக் கிளர்ச்சியான ஒரு பிரச்சனை உண்டாயிற்று. அக்காலத்தில் பாங்கி முதலாளியான நம் செட்டியார் நல்ல வாலிபமும், திடமும் வாய்ந்திருந்தவர். வாதம் மூளவே, செட்டியார் திடீரென்று பொறுமை இழந்து விட்டார்; மேஜைமேல் படீரென்று ஓர் அடி அடித்தார்; அந்த வாலிப வக்கீலை விழித்துப்பார்த்தார். "வெறும் பொய், நீர் சொல்வது; ஓர் அறையில் ஐந்து வருஷம் நீர்சிறையிருக்க மாட்டீர் காணும். இரண்டு லக்ஷம் நான் பந்தயம் கட்டுகிறேன்." என்றிரைந்தார் மிக வேகமாக.

"நீங்கள் உண்மையாகவே அது சொல்வதானால் 5 அல்லது 15 வருஷம் நான் இருக்கிறேன். பந்தயம்" என்றார், வக்கீல்.

"பதினைந்தா! சரி! கனவான்களே! நான் 2 லட்சம் பந்தயம் கட்டுகிறேன்" என்றார் பாங்கிக்கார்.

"சரி, சம்மதம். நீங்கள் 2 லட்சத்தைப் பந்தயம் வைக்கிறீர்கள்; நான் என்னுடைய உரிமையைப் பந்தயம் வைக்கிறேன்" என்றார், வக்கில்.

இவ்வாறாக இந்த வேடிக்கையும், முரட்டுத்தனமும் பொருந்திய பந்தயம் நிகழ்ந்தது. அந்தக் காலத்தில் செட்டியாருக்கு அளவில்லாத கோடிக் கணக்கான பணமிருந்ததாலே தாம் செய்து கொண்ட பந்தயத்தை நினைத்து அவர் தலைகால் தெரியாமல் சந்தோஷத்தில் மூழ்கியிருந்தார். சாப்பாடு ஆகிக்கொண்டிருக்கும்போது வக்கீலிடத்தில் ஹாஸ்யமாக, "நீங்கள் நன்றாக யோசித்துப் பாருங்கள்; அப்புறம் வருந்துவதிற் பயனில்லை. இரண்டு லட்சமென்பது எனக்கு ஒன்றுமில்லை. ஆனால் உங்கள் வாழ்வில் 3 அல்லது 4 வருஷகாலம்-கட்டிளமைப் பருவகாலம்—வீணாகப் போகிறது. மூன்று அல்லது நான்கு என்கிறேன். ஏன்தெரியுமா? அதற்கு மேல் உங்களால் முடியவே முடியாது. இன்னொன்று பாருங்கள்; சுயேச்சையாகச் சிறையில் போயிருப்பது பலவந்தமாகக் காவலிலிருப்பதைவிடக் கடினமாகும். பாவம்! உங்களுக்கு அது தெரியவில்லை. நாம் விரும்பினால் எந்த நிமிஷம் வேண்டுமானாலும் நமக்கு வெளியேறலாம் என்ற எண்ணமானது நீங்கள் சிறைவாசஞ் செய்கிற கால முழுவதும் தோன்றி உங்களை அப்படி இப்படி என்று அரித்துத் தின்னும். நான் உங்களுக்காக வருத்தப் படுகிறேன்" என்றார்.

இப்பொழுது 15 வருஷங்களுக்குப் பின் செட்டியார் அறையின் மூலைக்கு மூலை அடியெடுத்து நடந்துகொண்டே இவையாவற்றையும் நினைத்துப் பார்த்தார்.

"எதற்காக நான் இந்தப் பந்தயம் வைத்தேன்? என்ன பயன்? அந்த வக்கீலுக்கு வாழ்வில் 15 வருஷம் பயனற்றுப் போயின. எனக்கோ 2 லட்சத்தை வக்கீலுக்கு வாரிக் கொட்ட வேண்டி யிருக்கிறது. இதனால் மரண தண்டனை ஜீவாந்தரக் காவலைவிட மேலென்றாவது கீழென்றாவது ஜனங்கள் முடிவுகட்டி விடுவார்களா? சே! சே!! எல்லாம் வெறும் அநாவசியம். எனக்கு ஏதோ அன்று நன்றாகத் தின்ற கொழுப்பினால் வந்தது பைத்தியம். வக்கீலுக்கோ வெறும் பேராசையாற் பிடித்தது" என்று தனக்குள்ளேயே உசாவிக்கொண்டார்.

அந்த விருந்திற்குப் பின் நிகழ்ந்தனவற்றையும் அவர் ஞாபகப் படுத்திப் பார்த்தார். செட்டியாரின் வீட்டில் தோட்டத்துப் பக்க மிருக்கும் அறையில் வக்கீல் சிறைவாசஞ் செய்ய வேண்டியது என்று முடிவு கட்டப்பட்டது. சிறைவாச காலத்தில் வக்கீலுக்கு வாசற்படியைத் தாண்டவோ, வெளியிலுள்ள ஆட்களைப் பார்க்கவோ, அவர்கள் குரலைக் கேட்கவோ, கடிதங்களையோ செய்தித் தாள்களையோ பார்க்க எவ்வித உரிமையு மில்லையென்று ஒப்பந்தம் செய்யப்பட்டது. ஓர் இசைக் கருவி வைத்துக் கொள்ளலாம்; புத்தகங்கள் படிக்கலாம்; கடிதங்கள் எழுதலாம்; சுருட்டுப் பிடிக்கலாம்—இவ்வளவும் செய்து கொள்வதற்குச் சம்மதம் வழங்கப்பட்டது. உடன்படிக்கைப்படி வெளியிலுள்ளவர்களோடு ஏதாவது தெரிவிக்கவேண்டியதற்காகத் தனியாக ஒரு ஜன்னல் அமைக்கப்பட்டது. மௌனமாகவே தான் சிறையாளி தன் கருத்தை வெளியிட வேண்டும். புஸ்தகங்களோ, இசைக் கருவியோ, சுருட்டோ ஏதாவது வேண்டுமானால் விவரத்துக்கு அந்த ஜன்னல் வழியாக ஒரு சீட்டு எழுதிப் போட்டு விட வேண்டியது. அவைகள் வேண்டிய மட்டும் அனுப்பப்படும். இன்னும் சிறை வாசம் எவ்வளவு தூரம் ஏகாந்தமாக யிருக்க வேண்டுமோ, அதன் விவ

ரங்களெல்லாம் ஒன்று விடாமல் அந்த உடன் படிக்கையில் தெளிவாகக் குறிப்பிக்கப்பட்டதோடு, அதன் காலவரையைக் குறித்தும்—அதாவது 1870ஆம் கார்த்திகை மாதம் 14உ 12 மணி முதல் 1885-ம் வருஷம் கார்த்திகை மாதம் 14உ 12 மணி வரை—15 வருஷ சிறைவாசம் செய்யவேண்டியது என்றும் சந்தேகமில்லாதபடி தீட்டப்பட்டிருந்தது. இந்த நிபந்தனைகளில் எதையேனும் சிறிதளவாவது சிறையாளி மீறுவதற்கு முயன்றால் உதாரணமாகத் தன் விடுதலைக்கால வரைக்கு ஒரு இரண்டு நிமிஷத்துக்கு முன்னாவது தப்பி ஓடப் பார்த்தாலும், செட்டியார் பந்தயப் பணமான 2 லக்ஷத்தையும் கொடுக்கக் கட்டுப்பட்டவரில்லை என்றும் எழுதப்பட்டது.

சிறைவாசத்தின் முதலாவது ஆண்டிலே வக்கில் ஏகாந்தத்தினாலும், வேலையில்லாமையாலும் மிகுந்த துன்பமடைந்தார். (அவர் எழுதிவைத்த குறிப்புக்களிலிருந்து நமக்கு ஊகிக்க முடியும் வரை இவ்வாறு விளங்குகிறது) தோட்டத்துப் பக்கமிருந்து இராப் பகலாகச் சங்கீத ஒலி வந்துகொண்டேயிருந்தது. வக்கில் மதுவையும் புகையிலையையும் வேண்டாமென்று சொல்லி விட்டார். "மது இந்திரிய ஆசைகளை அதிகரிக்கச் செய்கின்றது. ஆசைகளே ஒரு சிறையாளியின் முக்கிய பகைவர்கள். அன்றியும், நல்ல மதுவைத் தனியாகக் குடித்துக் கொண்டிருப்பதை விட வேறெதுவும் அவ்வளவு எரிச்சலைக் கொடுப்பதில்லை" என்று அவர் எழுதியிருந்தார். புகையிலை அவர் அறையின் காற்றைக் கெடுத்து விடுகின்றது. முதல் வருஷ முழுதும் எளிய தினுசு புத்தகங்கள் வக்கிலுக்கு அனுப்பப்பட்டு வந்தன. அதாவது பெரிய காதல் ஒழுகும் நாவல்கள், கொலைகளும், துப்பறியும் ஆனந்த மிகுந்த கதைகள், தமாஷ் நாடகங்கள் முதலியன போன்றவை.

இரண்டாவது ஆண்டிலே, இசைக் கருவியின் ஒலி நின்று விட்டது. புத்தகங்[illegible]வக்கில் பழைய இலக்கியங்களையே [illegible].

ஐந்தாவது வருஷத்தில் திரும்பவும் இசை கேட்கப்பட்டது. சிறையாளி மதுவும் வேண்டுமென்றார். அவரைக் கவனித்தவர்கள், அந்த வருஷ முழுவதும் தின்றுகொண்டும், குடித்துக் கொண்டும், படுத்துக்கொண்டுமே இருந்ததாகச் சொன்னார்கள். அடிக்கடி கொட்டாவி விட்டார். தம்மோடேயே கோபத்தோடு உரையாடிக் கொண்டார். புத்தகங்களைத் தொடவே இல்லை. சில வேளை இராத்திரி வேளைகளில் உட்கார்ந்து எழுதுவார்; அதிக நேரமாக விடாமல் ஏதோ விரைவாக எழுதுவார். உடனே காலையில் அவ்வளவையும் கிழித்து எறிந்து விடுவார். அவர் வாய் விட்டு அழுததுகூட ஒன்றிரண்டு தடவையில் கேட்கப்பட்டதுண்டாம்.

ஆறும் ஆண்டின் பிற்பகுதியிலே, பற்பல பாஷைகள், தத்துவம், சரித்திரம் இவற்றை அதிக ஆர்வத்துடனே சிறையாளி கற்க ஆரம்பித்தார். இந்த விஷயங்களைச் சிறையாளி மிகுந்த விராகத்தோடு வாசிக்கவே, அவருக்குவேண்டிய போதுமான புஸ்தகங்களை வரவழைத்துக் கொடுப்பதற்குக் கூட பாங்கி முதலாளிக்கு நேரமில்லாதபடி வந்துவிட்டது. நான்கு வருஷகால வரைக்குள்ளே 600 புஸ்தகங்கள் அவருடைய தேவைக்காக விலைக்கு வாங்கப்பட்டுவிட்டன. இந்தத் தாபம் மிகுந்திருக்கையில் தான் ஒருநாள் சிறையாளியிடமிருந்து செட்டியாருக்கு ஒருகடிதம் வந்தது. "என் அருமைக்காவலாளிக்கு: நான் இந்தக்குறிப்பை ஆறு பாஷைகளில் எழுதுகிறேன். அவற்றை அந்தந்தப் பாஷா பண்டிதர்களிடம் காட்டவும்; அவர்கள் அதைப் படிக்கட்டும். அதில் ஒரு பிழையாவது அவர்கள் காணாவிட்டால், தயவு செய்து தோட்டத்தில் ஒரு குண்டு கேட்கும்படி செய்யவும். அந்தச் சத்தத்திலிருந்து என்னுடைய முயற்சிகளெல்லாம் வீண்போகவில்லையென்று அறிந்து கொள்வேன். காலந்தோறும், தேசந்தோறும் பேரறிஞரெல்லாம்

வெவ்வேறு பாஷைகளில் மொழிகின்றார்கள். ஆனால் அவற்றின்யாவற்றினூடும் எரியும் ஜோதி ஒன்றே. ஆ! அவர்களை ஆய்ந்து துய்ப்பதிலே எத்தகைய இன்பம் தெரியுமா?" என்று எழுதப்பட்டிருந்தது. சிறையாளியின் மனோரதம் பூர்த்தி செய்யப்பட்டது.—தோட்டத்திலே செட்டியார் உத்தரவுப் படி இரண்டு குண்டுகள் படீரென்று வெடிக்கப்பட்டன.

கொஞ்ச காலத்திற்கு அப்புறம் அதாவது பத்தாவது வருஷத்திற்குப் பிறகு வக்கீல் தமது மேஜை முன் அசையாமல் உட்கார்ந்து கொண்டே கிறிஸ்துவப் புது வேதத்தை மட்டும் படித்துக் கொண்டிருந்தார். நாலு வருஷகாலத்தில் மிகக்கடினமாக 600 பழைய நூற்களைக் கற்ற ஒரு மனிதன், எல்லோருக்கும் எளிதில் விளங்கக் கூடியதும் அளவில் சிறியதுமான இந்தப் புத்தகத்தை மட்டும் எதற்காக ஏறக்குறைய ஒரு வருஷமாகப் படித்துக் கொண்டிருக்க வேண்டுமென்று செட்டியார் ஆச்சரியமடைந்தார். புது வேதத்திற்குப் பிறகு சமய சரித்திர நூல்களும் சமய சித்தாந்தமும் கற்கப்பட்டு வரலாயின.

இறுதி இரண்டு ஆண்டு சிறை வாச காலத்திலே, சிறையாளி இன்னது தானென்றில்லாமல் எல்லாவித நூல்களையும் படித்தார், சிலவேளை இயற்கை அறிவியல் நூல்களைப் புரட்டிப் பார்ப்பார்; சிலவேளை பைரன் கம்பன் அல்லது ஷேக்ஸ்பியர் போன்ற புலவர்களைப்படிப்பார். ஒரே சமயத்தில் ரசாயன சாஸ்திரத்தில் ஒரு புஸ்தகமும், வைத்தியத்தில் ஒரு புஸ்தகமும், வேதாந்த தத்துவத்திலோ, அல்லது சைவ சித்தாந்தத்திலோ ஒரு புஸ்தகமும், ஒரு நாவலும் வேண்டுமென்று சீட்டு வருவதுண்டு. அவர் படித்ததைப் பார்த்தால், தன் மரக்கலம் மோதுறப் பெற்றுத் துணையின்றித் தத்தளிக்கும் ஒருவன் தன் உயிரைக் காப்பாற்ற ஒன்றன்பின் ஒன்றாக ஒவ்வொரு மரத்துண்டையும் பற்றிப் பிடிப்பது போலிருந்தது.

II

இவை யாவற்றையும் செட்டியார் ஓர்ந்துவிட்டு யோசிப்பார்.

"நாளைப் பன்னிரண்டு மணிக்கு அவன் தன்னுடைய உரிமையைப் பெறுகிறான். உடம்படிக்கைப்படி நான் அவனுக்கு 2 லக்ஷம் கொடுத்து விட்டால் நமக்கு அதோடு கப்பல் கவிழ்ந்தாய் விட்டது. அதற்குப பிறகு ஐ. பி. கொடுக்க வேண்டியதுதான்."

பதினைந்து வருஷங்களுக்கு முன் அவருக்கு எண்ண முடியாத பணமிருந்தது. இப்பொழுது எது கூடுதல் - கடனா தனமா? என்ற கேள்வியைத் தம்மையே கேட்டுக் கொள்ளவும் பயமுண்டாகிறது என்ற நிலைக்கு வந்து விட்டார். பட்டங்கள், குதிரைப் பந்தயங்கள், வழக்குகள், விருந்துகள், தேர்தல்கள், பொருளாதார நெருக்கடிகள், முதிர்ந்தும் போகாத சில முரண் பிடிவாதங்கள் முதலியவற்றால் நாளாவட்டத்தில் அவரது வியாபாரத்திற்குப் பெரிய இடி வந்துவிட்டது. அஞ்சா நெஞ்சம், தன்னம்பிக்கையும், கர்வமும் பிடித்த ஒரு வியாபாரி கடைசியில் கேவலம் மற்ற பாங்கி முதலாளிகள் போலவே விலை இறங்குவதையும், விலை ஏறுவதையும் நெஞ்சடிக்க எதிர் பார்த்து நடுங்கிக் கொண்டிருந்தார்.

"அந்த இழவுப் பந்தயம்! ஏன் சனி, அவன் இறந்து போகக்கூடாதா? அவனுக்கு 40 வயசு தானாகிறது. என்னுடைய பணமெல்லாம் ஒரு காசு விடாமல் எடுத்துக்கொண்டு, கலியாணம் பண்ணுவான்; கார்வைப்பான். சுகமாக அனுபவிப்பான். நான், ஒரு பிச்சைக்காரனாகி ஏமாறிப் பொறுமையோடு பார்க்கும்போதெல்லாம் அவன் என்னுடைய வாழ்க்கையின் சந்தோஷத்திற்கு நான் உனக்குக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏதோ கொஞ்சம் உதவி செய்கிறேன் என்று சொல்வதைத் தினமும் கேட்க வேண்டும். இல்லையா? ஆ! அது முடியவே முடியாது! இந்த அவமானத்திலும்

பிச்சைக் காரத்தனத்திலிருந்து தப்ப ஒரே வழிதானிருக்கிறது. அந்த ஆள் தொலையவேண்டும்.” என்று தன் தலை மயிரை இறுகப் பிடித்துக்கொண்டு முணுமுணுத்தான் கிழவன்.

மணி அப்பொழுதுதான் மூன்றடித்திருக்கிறது. செட்டியார் உற்றுக் கேட்டுக்கொண்டிருந்தார். வீட்டில் எல்லோரும் உறங்கிவிட்டனர்; வெளியில் மரங்கள் மட்டும் இரைவது கேட்கின்றது. எவ்வித சந்தடியும் செய்யாமல் செட்டியார் தமது இருப்புப் பெட்டியிலிருந்து 15 வருடகாலம் திறக்கப்படாத அந்தக் கதவின் சாவியை எடுத்தார்; போர்வையை எடுத்துப் போர்த்துக்கொண்டார்; வீட்டைவிட்டு வெளியே இறங்கினார். தோட்டத்தில் இருளும் குளிரும் நிறைந்திருந்தன. வானம் தூறிக்கொண்டிருந்தது. சிவ்வென்று குளிர்ந்து வீசிய காற்றானது, மரங்களுக்கு ஓய்வே கொடாமல் வட்டமிட்டு இரைந்துகொண்டிருந்தது. கண்ணை எவ்வளவு இடுக்கிப் பார்த்தும் செட்டியாருக்குத் தரையோ, வெண்சிலையோ அல்லது தோட்டத்துப் புற அறையோ ஒன்றும் புலனாகவில்லை. சிறைச்சாலை அறையிருந்த பக்கம் அணுகிக் காவலாளியை இருமுறைக் கூவினார். பதிலில்லை. “சரிதான். காற்றுக்கும் மழைக்கும் பயந்து அவன் சமையலறையிலோ, அல்லது கூடத்திலோ போய் தூங்கிக்கொண்டிருக்கிறான். “என்னுடைய எண்ணத்தை நான் பூர்த்தி செய்துகொள்ளத் தைரியமிருந்தால், சந்தேகம் முதலாவது காவலாளியின் தலைமேல்தான் விழும்” என்று கிழவன் எண்ணினான்.

இருட்டில் தப்பித் தடவிப் படிக்கட்டை, கதவு முதலியனவற்றைக் கடந்து ஒரு நீண்ட சந்துள் அவன் நுழைந்தான். தீக்குச்சியொன்றை உரைத்தான். ஒரு குருவிகூட அங்கு இல்லை. ஏதோ ஒரு படுக்கை சும்மாக் கிடந்தது. மூலையில் இரும்பு அடுப்பு ஒன்று கன்னங்கரேலென்று தெரிந்தது. சிறையாளியின் அறையின் கதவிலிருந்த முத்திரை உடைக்கப்படவில்லை.

தீக்குச்சி தீர்ந்து போனதும் உணர்ச்சியால் நடுக்குற்றவனாய்க் கிழவன் சிறையின் சிறு ஜன்னல் வழி உற்று நோக்கினான். அறைக்குள் ஒரு மெழுகு வர்த்தி மங்கலாக எரிந்துகொண்டிருந்தது. சிறையாளியும் மேஜை முன்னே உட்கார்ந்திருந்தார். அவருடைய முதுகும், தலை மயிரும் கைகளுமே கண்ணுக்குப் புலனாயின. மேஜைமேலும், அங்கிருந்த இரண்டு நாற்காலிகள் மேலும், அருகிலுள்ள பாயின்மேலும் பல புஸ்தகங்கள் திறந்து போடப்பட்டுத் தாறுமாறாய்க் கிடந்தன.

ஐந்து நிமிஷங்கள் ஆயின: சிறையாளி அசையவே இல்லை. 15 ஆண்டைய நெடுஞ் சிறைவாசம் அவருக்கு அசைவின்மையைக் கற்பித்துவிட்டது. செட்டியார் தம்விரலால் மெதுவாகப் பலகணியைத் தட்டினார். சிறையாளியிடமிருந்து மூச்சுப்பேச்சில்லை. உடனே செட்டியார் ஜாக்கிரதையோடு கதவிலிருக்கும் முத்திரைகளை உடைத்தார். பூட்டுக்குள் மெல்லத் திறவுகோலை நுழைத்தார். துருப்பிடித்திருந்த அந்தப் பூட்டு ஒரு துயரக்குழலை எழுப்புவதுபோலிருந்தது. கதவு இரைந்தது. ஓர் ஆச்சரிய விளியும், கால் அடிகள் வைக்கும் சத்தமும் உடனே உண்டாகுமென்று செட்டியார் எதிர்பார்த்தார். மூன்று நிமிடங்கள் கழிந்தன. ஆயினும் கதவுக்கு உட்பக்கம் முன்போலவே எப்பொழுதும் சந்தடி இல்லாதிருந்தது. உள்ளே நுழைவதற்கு அவர் தீர்மானித்தார்.

மேஜையின் எதிராக ஓர் உருவம் உட்கார்ந்திருந்தது. பார்வைக்கு சாதாரண மனிதனைப்போல் காணப்படவில்லை.

உந்திய எலும்பும் ஒட்டிய தோலுமாக இருந்தது. தலைமயிர் பெண்களின் கூந்தலைப்போலவே நீண்டு சுருண்டு சிக்கல் பிடித்துக் கிடந்தது. தாடி அடர்ந்து வளர்ந்திருந்தது. முகம் மிக வெளுத்து உலர்ந்திருந்தது. கன்னங்

கள் சூழ்ந்திருந்தன. முதுகு நெருங்கி கெட்டுவிட்டுக் காணப்பட்டது. மயிரடர்ந்த தலையைத் தாங்கிக்கொண்டிருந்த கை மிகவும் வற்றி உலர்ந்து எலும்போடிருந்தது. அதைப்பார்க்கும் பொழுதே துயரமாக இருந்தது. மயிர் நரைத்து வெளுத்துக்கொண்டு வருகின்றது. வாடிவதங்கிய அந்த முகத்தைப் பார்க்கும்பொழுது 40 வயதுதானாயிற்றென்றால் யாரும் நம்பவே மாட்டார்கள். மேஜைமேல் அவருடைய குனிந்த தலைக்கு முன்னாக ஒரு காகிதத் துண்டு கிடந்தது; அதில் மிக நுணுக்கிய எழுத்தில் ஏதோ எழுதப்பட்டிருந்தது. "ஐயோ, பாவம் பைத்தியக்காரன்! தூங்குகிறான். ஒருவேளை லட்சம் லட்சமாகக் கனவு காண்கிறான்போலிருக்கின்றது. குற்றுயிராகக் கிடக்கும் இதைப்பிடித்து நான் படுக்கையிற் தூக்கி எறியவேண்டியது; பிறகு தலையணையை வைத்து அமுக்கி நெருக்கிவிடவேண்டியது; அவ்வளவு தான்; பிறகு எந்தச் சீமை டாக்டர் வந்தாலும் விஷயம் இப்படி என்று கண்டுபிடிக்க முடியாது. ஆனால், அதற்கு முன்னால் அவன் என்ன இங்கு எழுதி இருக்கிறானென்று பார்ப்போம்" என்று தமக்குள்ளேயே செட்டி சொல்லிக்கொண்டான்.

முதலாளி மேஜைமேலிருந்து அந்தக் கடிதத்தை எடுத்துப் பின் வருமாறு வாசித்தான்.

"நாளை நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு நான் என் விடுதலையை அடைவேன்; உலகோடு கலந்துகொள்ளும் உரிமையைப் பெறுவேன்; ஆனால் நான் இந்த அறையைத் துறந்து ஒளியைப் பார்க்குமுன் உங்களிடம் சில வார்த்தைகள் சொல்லுவது அவசியம். என்னுடைய மனச் சாட்சியின் பேரால், என்னைக் காணும் கடவுள் பேரால், நான் சுதந்திரம், வாழ்வு, ஆரோக்கியம், இன்னும் உங்கள் நூல்கள் கூறும் ஏதேதோ இவ்வுலக இன்பங்கள் யாவற்றையும் வெறுக்கிறேன் என்று உம்மிடம் அறிவிக்கின்றேன்.

"பதினைந்தாண்டுகளாக நான் உலக வாழ்வைப்பற்றி உலப்பின்றிப் படித்துவிட்டேன். உண்மையே, நான் மண்ணையோ அன்றிப் பிற மக்களையோ பார்க்கவில்லை. இருப்பினும் உங்கள் நூல்களிலே நான் இன்னும் மதுவை மாந்தினேன். கனியும் கவி இசை பாடிக் களித்தேன். கானினில் வெம்மானொடும் மாவொடும் பொருதினேன். கருவிழியாரோடு காதலில் திளைத்தேன்....உங்கள் கவிகளின் அற்புதக் கற்பனைத் திறத்தினாலே படைக்கப்பட்ட அழகே உருவன்ன மாதரார் - அரம்பையன்ன அணங்கைமார்-என்னை இராப்பொழுதெல்லாம் கலந்தனர்; விந்தைக் கதைகளைக் கிள்ளை மொழி கொண்டு மெல்ல விளம்பினர்; என் தலைக்கு வெறியேற்றினர். உங்கள் நூல்களிலே நான் மேருவினதும் கயிலையினதும் மேற்கோடு ஏறினேன். அங்கிருந்து காலையிலே கதிரோன் எழுவதும், மாலையிலே ஊரும், கடலும், மலையும் தங்கத் தழலால் திளைப்பதும் கண்டேன்; அங்கிருந்து மின்னல்கள் மேகக் கூட்டங்களை ஊடுருவிப் பிளப்பது கண்டேன். பச்சைப் பசேலென்ற கானகங்களையும், வயல்களையும் ஆறுகளையும் ஏரிகளையும் நகரங்களையும் நான் கண்டேன்; தெய்வ மாதர்கள் தீங்குரல் கேட்டேன்; கண்ணன் குழலொலி கேட்டேன்; கடவுளின் புகழை அறிவிக்கப் பறந்துவந்த வனப்புடைய கந்தருவர்களின் சிறகுகளைத் தொட்டேன்; உங்கள் நூல்களிலே நான் நீண்டாழ்ந்த பெருங் குழிகளிலே வீழ்ந்தேன்; சித்திகள் பல செய்தேன்; நகரங்களை எரித்துச் சிதைத்தேன்; புதிய மதங்களைப் போதித்தேன்; எல்லையற்ற நாடுகளை வென்று புகழோச்சினேன்.

"உங்கள் நூல்கள் எனக்கு ஞானத்தைத் தந்தன; நூற்றாண்டுகளாக விடாது மனித சிந்தை படைத்தன யாவும் என் மூளைக்குள்ளே அமுக்கி அழுத்தி வைத்திருக்கிறேன். உங்களெல்லோரையும் விட நான் அதி

விற் பெரியவனென்று எனக்கு நன்றாகத் தெரியும்.''

''எனினும் நான் உங்கள் புஸ்தகங்கள், உங்கள் உலக இன்பங்கள், உங்கள் அறிவுக் குப்பைகள் எல்லாவற்றையும் வெறுக்கின்றேன். எல்லாம் கானலின் நீர்போல வெறும் மாயை, பொய்த் தோற்றம், பித்தலாட்டம். பெரு ஏமாற்றம். நீங்கள் எவ்வளவுதான் ஆண்மையும் அறிவும், அழகும் பெற்றிருந்தும் காலன், வளைக்குள்ளிருக்கும் கேவலம் எலியைப் போல உங்களையும் தேய்த்து விடுகிறான். இறுதியில் உங்கள் பெயர், உங்கள் சரித்திரம், உங்கள் அறிஞரின் பொன்றாப் புகழ் யாவும் ஒடுங்கி இந்த அண்டத்தோடு எரிந்து சாம்பலாய் முடியும்.''

''உங்களுக்குப் பித்துப் பிடித்திருக்கின்றது. நீங்கள் முறை தவறி நடக்கின்றீர்கள்; பொய்யை மெய்யாகக் கொள்கின்றீர்கள். கோரத்தை அழகாகக் கொள்கிறீர்கள். ஏதாயினும் சில நிலை மாறுதல்களினாலே மாமரத்திலும், மாதுளை மரத்திலும், கனிகளுக்குப் பதிலாகப் பல்லியும் தவளையும் திடீரென்று காய்த்தால், நறுமணம் தந்த ரோஜா மலர் திடீரென்று கெட்ட நாற்றத்தை உமிழ்ந்தால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். அதுபோலவே நானும் உங்களைப் பார்த்து ஆச்சரியப்படுகிறேன். நீங்கள் வானுலகை இழந்து மண்ணுலகைப் பெறுகின்றீர்கள். நான் உங்களைத் தெரிந்து கொள்ள விரும்பவில்லை.

''நீங்கள் எதனால் உயிர் வாழ்கின்றீர்களோ, அதன் பேரிலுள்ள வெறுப்பைச் செயலில் கண்கூடாகக் காட்டுவதற்காக, இதோ, நான் ஒரு காலத்தில் தேவலோக சித்தி என்று நினைத்திருந்த, இப்பொழுது அறவே வெறுக்கிற அந்த இரண்டு லட்சத்தையும் அலட்சியம் செய்கிறேன். எனக்கு அத்தப்பணத்தின் பாலுள்ள உரிமையை ஒழிப்பதற்கென்றே நான் உடம்படிக்கையில் குறிப்பிட்ட காலவரைக்கு ஐந்து நிமிஷங்களுக்கு முன் இங்கிருந்து வெளியேறி, அவ்வாறாக நானாகவே, உடம்படிக்கையிற் கண்ட நிபந்தனைகளை மீறிக் கொள்கிறேன்.''

இதைப் படித்ததும், செட்டி மேஜை மேல் கடிதத்துண்டைப் போட்டான். அந்த அற்பமனிதனின் பாதத்தைத் தொழுதான்; அழ ஆரம்பித்தான்; பின் அறையை விட்டு வெளியேறினான். தமக்கு எவ்வளவோ வியாபார நஷ்டங்கள் வந்த போதுங் கூட அவன் தன்னையே இம்மாதிரி இவ்வளவு, வெறுத்தது கிடையாது. வீட்டுக்குள் நுழைந்து படுக்கையில் தலையைப் போட்டான்; ஆனால் உணர்ச்சியும், கண்ணீரும் தூக்கத்தை நெடுநேரம் வரவொட்டாமல் தடுத்தன.

மறுநாட் காலை, பாவம், அந்தக் காவலாளி ஓடிவந்து தோட்டத்து அறையிலிருந்த மனிதன் ஜன்னல் வழியாக ஏறித் தோட்டத்துள் குதிப்பதைக் கண்டதாகவும், பிறகு கேட்டுப் பக்கம் ஓடி மறைந்து விட்டதாகவும் உடனே தன் வேலையாட்களோடும் செட்டி ஓடிவந்து சிறையாளி தப்பி ஓடி விட்டதை ருசுப்படுத்தினான்.

பின்னும் ஏதாவது வதந்தி உலவக் கூடுமென்பதை நினைத்து, மேஜை மேலிருந்த துறவுக் கடிதத்தையும் கையில் எடுத்துக் கொண்டான்; வீடு போனதும் அவனுடைய இருப்புப் பெட்டியிலே, மிகப்பத்திரமாகப் பூட்டி வைத்துக் கொண்டான்.

க ம ல நா த ன்

[திரு. எஸ். ருத்ரபதி, B. [illegible]]

II

மரகதவல்லி தன் இன்னுயிர்க் காதலனை எப்படியுங் காணலாமென்னும் ஆசையால் ஒருவாறு துயர் நீங்கி எழுந்து உட்கார்ந்திருந்தாள். வெளியிற் சென்றிருந்த இராமசாமிப் பிள்ளையும் வந்து சேர்ந்தார்; தம் பெறலரும் புதல்வியின் திருமுகச் செவ்வியைக் கண்ணுற்றார். என்றும் மகிழ்ச்சியொடு விளங்கும்முகம் இன்றுவாடியிருப்பதற்குக் காரணம் என்னவென்று கேட்டார். மரகதவல்லி தான்ஏதோ தீக்கனு முதல் நாளிரவு கண்டதாகவும், அந்தக் கனவில் தன்னூரை விடுத்து வெளியேறிப் போவதுபோலக் கண்டதாகவும் அதனால் வருத்தமாயிருப்பதாயுங்கூறினாள். இராமசாமிப்பிள்ளை தம் மகளைக் கனவின் பொருட்டு வருந்த வேண்டாமென்று கூறிவிட்டுத் தன்னூருக்குப் பக்கத்தேயுள்ள நச்சாந்துபட்டி யென்னுங் கிராமத்திற்கு அவசர நிமித்தஞ் சென்று இரண்டு நாட்களில் வருவதாய்க் கூறிச் சென்றார்.

மரகதவல்லி தன் தாயிடம் போய்ப் பக்கத்து வீடுசென்று, அங்குள்ள தன் தோழியுடன் உரையாடியிருந்து வருவதாகக் கூறி வீட்டை விடுத்து வெளியேறிப் புதுக்கோட்டை வந்து சேர்ந்தாள். தஞ்சைக்குப் போகும் மோட்டாரொன்று தயாராக நின்றது. அதில் ஏறினாள். சில நிமிஷ நேரத்திற்கெல்லாம் கார்காரெனக் கடிது சென்றது. கந்தர்வகோட்டை வந்ததும் மரகதவல்லி யிறங்கினாள். தன் ஆருயிர்க் காதலி வரும் வழிமேல் விழிவைத்திருந்த கமலநாதனை அவள் சந்தித்தாள். ஒருவரையொருவர் கட்டித் தழுவினார்கள். மரகதவல்லி கண்ணீர் விட்டழுதாள்.

கமலநாதன்:— "மரகதமே! ஏன் அழுகிறாய்! ஊரை விடுத்து வந்தமை கருதி வருந்துகின்றாயா?"

மரகதவல்லி:—காதல! தங்களுக்கு எதிர்பாராது நாட்டை விடுத்தேகக் கட்டளை பிறந்தமையை நினைத்தும்; அடியேனைச் சாலப்பரிந்தமுதூட்டி வளர்த்த தாயையும் அன்புடன் கல்வியறிவூட்டிய தந்தையையும் பிரிந்தமை கருதியும் என் உள்ளந் துடிக்கின்றது"

கமலநாதன்:—மரகதமே! கவலற்க! நாம் மீண்டும் புதுவைக்கு விரைவில் வந்து விடலாம். உன் தாய் தந்தையையும் யாம் மீண்டும் சந்திக்கலாம்.

இம்மாதிரி வருந்திய மரகதவல்லியைக் கமலநாதன் ஒருவாறு தேற்றவே சற்று வருத்தம் நீங்கியிருந்தாள். அன்றிரவு இருவரும் கந்தர்வகோட்டையில் இருந்தனர்; மறுநாள் அதிகாலையில் துயில் நீத்துத் தஞ்சைசெல்லும் மோட்டாரில் ஏறித் தஞ்சை சேர்ந்தார்கள். மணி சுமார் 9 இருக்கும். 9-30க்கு ஒரு இருப்புத்தொடர் வண்டி சென்னைக்குப் புறப்படும் என்று அங்கொரு கரும் பலகையில்எழுதப்பட்டிருந்தது. அரைமணி நேரத்திற்குள் பக்கத்திருந்த சிற்றுண்டிச்சாலையில் நுழைந்து காலைப்பசிநோய் தணித்து மீண்டு ஸ்டேஷனில் சென்னைக்கு இரண்டு இரண்டாவது வகுப்பு பிரயாணச் சீட்டுகள் பெற்றுக்கொண்டு அவர்கள் வண்டியில் ஏறினார்கள். "ஹிந்து" பத்திரிகை யொன்று வாங்கி கமலநாதன் வாய் விட்டுச் சற்று உரத்த குரலில் படித்துக் கொண்டே வந்தான். அவர்கள் ஏறிய சிறிது நேரத்திற்கெல்லாம் வண்டி புறப்பட்டது. மரகதவல்லியும் ஆங்கிலப்பயிற்சி யுடையவளாதலால் கமலநாதன் படித்து வருவதைக் கவனமாய்க் கேட்டுவந்தாள். மாகாணச் செய்திகள் கடைசி பக்கத்தில் பிரசுரிக்கப் பட்டிருந்தன. அவைகளில் 'புதுக்கோட்டை'யென்று பொறித்திருந்தது. அஃதென்னவென்று பார்த்தான். தண்ணீர்க் குறைவால் மக்கள் வாடுவதாகவும் அரசாங்கத்தினர் அது சம்பந்த

மாய் அதிகக் கவலை செலுத்த வேண்டுமென்றும் எழுதப்பட்டிருந்தது. அதற்கடியில் "கமலநாதன் B. A. என்பார் அரசாங்கத்தைத் தாக்கிப் பேசிய காரணத்தால் நாட்டைவிடுத் தப்புறப்படுத்தப்பட்டார்" என்று எழுதப்பட்டிருந்தது. பிறந்த நாட்டை விட்டுப் போக நேர்ந்ததே என்னும் வருத்தம் பத்திரிகையில் இம்மாதிரி பொறித்திருந்ததை வாசிக்கும்பொழுது அதிகரித்தது. கண்ணீர் முத்து முத்தாகக் கமலநாதன் உகுத்தான்; மரகதவல்லி தேற்றத் தேறியிருந்தான்.

இருவரும் சென்னை சென்று என்ன செய்வது என்பதைப்பற்றி ஆலோசித்துக்கொண்டேயிருந்தார்கள். வண்டி இரவு சுமார் 9-45க்கு எழும்பூர் வந்து சேர்ந்தது. ஒற்றை மாட்டு வண்டியொன்றில் ஏறிக்கொண்டு வெப்பேரி நோக்கிச் சென்றார்கள். அவன் கமலநாதனதாருயிர்த் தோழர் சாந்தமூர்த்தி வீடு வல்லம் பங்காரு செட்டித் தெருவில் இருந்தது. சாந்தமூர்த்தியும் அவரது காதலி கோகிலாம்பாளும் கருத்தொருமித்து அன்புடன் வருவிருந்து வைகலும் ஓம்புந் தன்மையர். அவர்களில்லத்தில் கமலநாதனும் மரகதவல்லியும் சிலநாள் தங்கியிருந்தனர்.

இவர்கள் இங்ஙனந் தங்கியிருக்கப் புதுக்கோட்டையில் கமலநாதனது பெற்றோர்கள் தங்கள் பெறலரும் புதல்வன் பிரிவால் மனம் வாடினார்கள். மரகதவல்லியின் தாயார் அன்று மாலை, பக்கத்து வீடு சென்ற தன்மகள் வாவில்லையேயென்று அவ்வீடுற்றுப் பார்த்தாள். ஆங்கு மரகதவல்லியைக் காணவில்லை. யாவரையுஞ் சென்று உசாவினாள். ஒருவரும் கண்டதாக வுரைக்கவில்லை. மிகவும் வருந்திய வண்ணம் அன்றிரவெல்லாம் தன் மகளைப் பற்றிய கவலையுடன் உறக்கமின்றியிருந்தனள்.

மறுநாட் காலை நச்சாந்துபட்டிக்கு ஆள் போக்கினாள். ஆள்சென்று இராமசாமிப் பிள்ளையையுடனே யழைத்து வந்தான். தம் மகள் வீட்டை விடுத்துச் சென்றுவிட்டாள் என்னுஞ் செய்தியைக் கேட்டதும் செவியிற் கனல் நுழைந்தாற்போல் அவர் ஆராத்துயர் உற்று என்னஞ் செய்வது புரியாது திகைத்தார். தன் மகளைத் தேடவும் நாணினார்; ஊராரெல்லாம் பழிப்பார்களே என்று அஞ்சினார்; தாம் மரகதவல்லியைக் கந்தசாமிக்குக் கொடுக்க நினைத்தது தவறுடைத் தென்பதையோர்ந்தார். மரகதவல்லியும் நன்றாகப் படித்தவள். ஆகவே அவள் பிறர் பழிக்குமாறு நடக்கமாட்டாள் என்னுந் துணிபு மாத்திரம் அவருக்குண்டு. அத்துடன் தம் மகள் முதல் நாள் கூறிய கனவு தம் ஞாபகத்துக்கு வந்ததும் குறிப்பாகத் தாம் வெளிப்பட்டுப் போதலைக் குறித்திருக்கிறாள் என்பதையறிந்தார். தவிரவும், மரகதவல்லி கமலநாதனுடன் நட்பு கொண்டிருந்தாள் என்பதையும் அவர் நன்குணர்ந்திருந்தார். கமலநாதனை நாடு கடத்திய செய்தி அவருக்குத் தெரியும். ஆகவே அவன்தான் தம் மகளை அழைத்துச் சென்றிருக்க வேண்டும் என்று முடிவு செய்துகொண்டு எல்லாம் இறைவன் திருவுளம் போலும் என்று வாளாவிருந்தார்.

இஃதிவ்வாறாக, சென்னை சென்றவர்களைப்பற்றிச் சிறிது நோக்குவோம்.

மரகதவல்லி:—"காதல! நாம் இருவரும் இந்நாட்டை விடுத்துச் சிங்கப்பூர் முதலான அயல் நாடுகள் சென்று இன்புற்றிருக்கலா மென்றெண்ணுகின்றேன். தங்களது திருவுளம் எப்படியோ?"

கமலநாதன்:— "மரகதமே! பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவானிலும் நனி சிறந்தனவே" என்று நம் பாரதி கூறியுள்ளார். ஆகவே நாம் பிறந்த நாட்டை விடுத்தேக மனம் புண்ணடைகின்றது"

மரகதவல்லி:—"அப்படியானால் நாம் சென்னையில் தங்கி என்ன செய்யலாம்? தாங்கள் B. A. பட்டம் பெற்றிருக்கிறீர்கள். ஏதேனும் ஓர் உத்தியோகமாவது தேடுவீர்களாக."

கமலநாதன் இளம் பிராயமுதற்கொண்டே காந்தியடிகளைப் பின்பற்றி வந்தவனாதலால் தீண்டாமையொழிப்பதற்கு ஒரு பத்திரிகை ஆரம்பித்து நடத்துதல் சாலச்சிறப்புடைத்தென்று கூறவே, மரகதவல்லி, "இக்காலத்தில் பத்திரிகைகள் மலிந்துள்ளன. இருக்கிற பத்திரிகைகளை ஆதரிப்பவர்களைக் கண்டிலமே. இந்நிலையில் நாம் ஒரு பத்திரிகை யாரம்பித்தால் ஆதரிப்பார் கிடைப்பதரிது" என்றாள். கமலநாதன் "வாரப்பத்திரிகையொன்று ஆரம்பித்து குறைந்த விலைக்குக் கொடுத்தால் தென்றமிழ் நாட்டார்கள் நன்றாக ஆதரிப்பார்கள்" என்று கூறியதுடன் "அப்பத்திரிகைக்கு "பழந்தமிழர்" என்று பெயர் சூட்டி விரைவில் ஒன்று ஆரம்பித்துவிடலாம்" என்றான். பொதுவாக அரசியல் செய்திகளை வெளிப்படுத்தி வந்தாலும் சிறப்பாகத் தீண்டாமை விலக்கைப் பற்றித் தானெழுதி வெளியிட வேண்டு . மென்று தீர்மானித்தான்.

பிறகு வேப்பேரியை விடுத்துத் திருவல்லிக்கேணியுற்று அங்குள்ள ஹிந்தி பிரசாராலயத்தருகே ஓரிடம் வாடகைக்கு வாங்கிக்கொண்டு "பழந்தமிழர்" என்ற பத்திரிகையை வெளியிட்டார்கள். இந்தப் புதுப் பத்திரிகையைப்பற்றி ஏனைய சிறந்த பத்திரிகைகள் எல்லாம் சிறப்பாக எழுதித் தமிழ் நாட்டார் ஆதரிக்கும் வண்ணம் விண்ணப்பஞ் செய்தனர். தீண்டாமையையொழிப்பதில் நாடு முனைந்து நின்றதால் இப்பத்திரிகைக்கு ஏராளமான சந்தாதார்கள் சேர்ந்தார்கள். கமலநாதன் மரகதவல்லியை இல்லக்கிழத்தியாக்க மணம் புரிய நிச்சயித்தான். தங்களது பெற்றோர்களுக்குத் தங்கள்மனப் போக்கைத் தெரிவித்துக் கடிதங்கள் போக்கினார்கள். அவர்களும் தற்காலத்திற் கேற்ற மணந்தான் என்று கருதி இந்தக் கலப்பு மணத்திற்குச் சம்மதப்பட்டுச் சென்னைவந்து சேர்ந்தார்கள். திருமணம் ஒருநன்னாளில் நறுமணமாக நடைபெற்றது.

கமலநாதனும் மரகதவல்லியும் கருத்துவேறுபாடின்றி இன்பவாழ்வை நடத்தியதுடன் நாட்டின் விடுதலை கருதி அரும்பாடு பட்டு வந்தனர் "பழந்தமிழர்" என்னும் பத்திரிகையும் சிறப்புற நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருங் குழவிபோல் நாட்டினர் ஆதரவுபெற்று வளர்ந்தோங்கியது. அவர்கள் என்றுஞ் சிறப்புற்று வாழ்வார்களாக.

"பொங்கும் மங்களம் எங்குந் தங்குக"

சுந்தர சுலோசனை

[திரு. டி. ஆர். சாரங்கபாணி, எம். ஏ.]

(தொடர்ச்சி)

இதழ் 6

பிரபுவே! மோகனசுந்தரங் குற்றமற்றவன்

"பிரபுவே! யான் இங்குப் போந்ததிலிருந்து உம்மிடந் தனித்துப் பேச இப்பொழுதே சமயம்வாய்த்தது. நீர் அன்றிரவு என்னிடமறைந்த விவரங்களினின்றும் பிறந்த சில சந்தேகங்களைக் களைய நினைந்தே இதுகாலை உம்முடன் பேச விழைந்தேன். யான் மாறுபெயருடன் உம்முடைய அரண்மனையணுகியும் என்னை, வழக்கில் சம்பந்தப்பட்ட என்னுடைய அருமை விரோதியர், யாரோ அறிவார்கள் என இன்றுகாலை யுணர்ந்தேன்."

"ஜயகுமாரரே! நீர் கூறுவது எனக்குப் பெரும் வியப்பையே மூட்டுகின்றது. மாறுவேடக் கோலத்துடன் உம்

மைக் கண்டு யானும் மயங்கியதை நீரே அறிவீர். அந்நிலையில் உம்முடைய விரோதியர்கள் உம்மை அறிந்து கொண்டது பெரும் வியப்பையே அளிக்கின்றது.”

“என்னை அவர்கள் அறிந்துகொண்டமையான் பெரும் நஷ்டம் ஒன்றும் விளைந்துவிடப் போவதில்லை. எனினும் அவர்கள் என்னை அறியாமலிருப்பின், மிகவும் நலமாக இருக்கும். இனி அதனை எண்ணிக் கவலைப்பட்டுப் பயனென்? பிரபுவே! உம்முடைய இருப்புப்பெட்டி இருக்கும் அறையை நான் பார்க்கவேண்டும். ஆனால் பார்ப்பதன் முன்னர் இரண்டொருவிஷயங்களை யான் அறிய விரும்புகின்றேன். பிரபுவே, உம்முடைய இருப்புப் பெட்டியிலிருந்து வைரமாலையும் வாளும் ஏனைய நகைகளும், களவாடப்பட்டதை சுலோசனை அறிவார்களா?”

“ஐயகுமாரரே! சாதவின் இயல்பையோர்ந்த யான் அவ்வுண்மையைச் சுலோசனைக்குக் கூறின், அவள் பெரிதும் வருந்துவாளென அறிவேனாதலின் யான் அதனை அவளிடம் இயம்பவில்லை. எனவே, அதனை அவள் அறியாள் என்றே யான் கூறுவேன்.”

“களவாடப்பட்ட உண்மையை உரிமையுறையுளில் ஒருவரும் அறியார்களா?”

“அறியார்கள்.”

“பிரபுவே! யான் இப்போது கேட்க விரும்பும் கேள்வி உமக்குச் சிறிது சஞ்சலத்தை யளிப்பினும் அளித்தலாகும். ஆனால், உம்முடைய நலனைக் கருதியே நான் உம்மை அவ்வினாவுக்குற்ற பதிலை இறுக்குமாறு வேண்டுகின்றேன். பிரபுவே! நீர் அவ்வைர மாலையையும் வாளையும் மோகனசுந்தரப் பிரபுவுக்குக் காட்டுங்கால் சுலோசனையின் தோழியாகிய சாரதாவும் அதைக் கண்டார்கள் அல்லவா?”

“ஆம்”

“சாரதாவின் ஒழுக்கம் எத்தகையதெனவே யான் அறிய விரும்புகிறேன்.”

“ஐயகுமாரரே! சாரதாவின் ஒழுக்கத்தின் மண்பை நீர் அறியீராதலின் அவள் மீது சந்தேகங் கொண்டீர். நண்பரே! நல்லொழுக்கங்களெல்லாம் ஒருங்கியைந்த மாண்பு சாரதாவுக்கே உரியது. நீர் அவள்மீது சந்தேகங் கொள்வது பெருந்தவறே யாகும்.”

“பிரபுவே! நான் சாரதாவின் மீது சந்தேகங் கொண்டேனென நீர் நினைப்பது தவறு. ஆனால் இத்தகைய விஷயங்களை அறிவது என்னுடைய தொழிலுக்கு ஏற்ற உதவி புரியும். நீர் அவ்வளவு உறுதியாக சாரதாவின் நல்லொழுக்கத்திற்குச் சான்று கூறுகையில் நான் அவளைச் சந்தேகிக்க இயலாது. பிரபுவே! சண்முகசுந்தரப் பிரபுவின் கடிதங்களில் ஒன்றேனும் உங்களிடத்தி லிருக்குமா?”

“எண்ணிறந்தவை இருக்கின்றன. ஆனால் அவைகள் இருப்புப் பெட்டியிலேயே பூட்டப்பட்டிருக்கின்றன. நாம் அறையைக் காணச் செல்லுங்கால் அவைகளை உமக் களிக்கின்றேன்.”

“பிரபுவே! உம்முடைய பணியாளர்களில் ஒருவர் மீதும் உமக்குச் சந்தேகமில்லையல்லவா?”

“ஐயகுமாரரே! என்னுடைய பணியாளர்கள் நன்றிமறவா உத்தமர்கள்; சமயம் நேரின் தங்களுடைய உயிரையும் எனக்களிக்கத் துணியும் தூயர். எனவே அவர்கள் தங்களை மறந்தும் இக்காரியத்தைச் செய்யார்கள்.”

“பிரபுவே! உம்முடைய உறுதிவாக்கு என்னுடைய சந்தேகங்களெல்லாவற்றையும் இதனுள் மாறுசெய்து விட்டது. அருக்கன் ஆழ்கடலாழுஞ் சமயமும் நெருங்கிவிட்டது. உம்முடைய இருப்புப் பெட்டியுள்ள அறைக்குச் செல்வோம் வாருங்கள்”

‘ஐயகுமாரரே வாருஞ் செல்வோம்.’

சந்திரசேகரப் பிரபு ஐயகுமாரனை அழைத்துக்கொண்டு அவ்வறைக்குச் சென்றார். வழக்கம்போல் அவ்வறை பூட்டப்பட்டே இருந்தது.

அவ்வறையின் இருப்புக் கதவைக் கண்டு ஜயகுமாரன் திகைத்தான். சந்திரசேகரப் பிரபு அவ்வறையின் கதவைத் திறக்க, ஜயகுமாரன் சந்திரசேகரப் பிரபுவுடன் அறையுள் நுழைந்தான். அறையுள் நுழைந்ததும் ஜயகுமாரனுடைய கூரிய கண்கள் அறையின் நாற்புறமும் ஒருமுறை நோக்கின. சுமார் பனிரண்டடி நீளமும் பத்தடி அகலமும் உள்ள அவ்வறையில் இரண்டு சாளரங்கள் இருந்தன. இடது பக்கத்தில் சுவரோரத்தில் ஒரு மேஜையும் அதனருகில் ஒரு சுழலும் நாற்காலியுமிருந்தன. சுவர்களில் இயற்கையெழில் மிகுந்த படங்கள் மாட்டப்பட்டிருந்தன. இருமின்சார விளக்குகளும், இடையில் மிளிர்ந்த ஒருசிறு மின்சார விசிறியும் அவ்வறையின் எழிலை மிகுத்தன. அவ்வறையின் வலப்பக்கத்தில் இருப்புப் பெட்டியொன்றிலங்கியது. அது சிறிது சுவரில் புதைக்கப்பட்டிருந்தது. இருப்புப் பெட்டியைக் கண்டதும் ஜயகுமாரன் அப்பெட்டியின் முப்புறமும் முதலில் ஆராய்ந்தான். பின்னர் அவ்வறையிலிருந்த இருசாளரங்களையும் ஜயகுமாரன் ஆராய்ந்தான். அவைகளின் இருப்புக் கம்பிகளையும் இருப்புக் கதவங்களையும் ஆராய்ந்ததும் அவைகளின் வழியாக ஒரு கள்வனும் அறையுள் வந்திடவில்லை என்பது அவனுக்குத் தெற்றென விளங்கியது. அழகாகச் சிமிட்டியிடப் பட்டிருந்த அறையின் தரையை ஜயகுமாரனுடைய கண்கள் நாடின. அடுத்த நிமிடம் ஜயகுமாரன் தன்னுடைய சட்டைப் பையிலிருந்து ஒரு பூதக் கண்ணாடியை எடுத்தான். அக்கண்ணாடியை அணிந்துகொண்டு இருப்புப் பெட்டியின் மூடிக்கருகில் ஜயகுமாரன் குனிந்து நோக்கினான். கதிரவன் கடலாழுஞ் சமயமாதலான், போதிய வெளிச்சம் அறையுளில்லாமையான் ஜயகுமாரன் தன்னுடைய மின்சாரக் கை விளக்கை ஏற்றினான். அதனுடைய ஒளியில் அறையின் தரையைக்குழுந்தையைப்போலும் முட்டிகளையுங் கரங்களையும் ஊன்றிக்கொண்டு ஜயகுமாரன் நெடுநேரம் தரையை உற்றுநோக்கிக் கொண்டிருந்தான். சிறிது நேரங் கழித்து முகமெல்லாம் வியர்ப்ப, அவ்வறையின் கதவையணுகி அதன் தாளை உற்று நோக்கினான். மற்றுமொரு முறை ஜயகுமாரன் அறையின் நாற்புறமும் உற்று நோக்கினான். அவனுடைய கண்கள் மேல்தலத்தை நோக்கின. அவனுக் கொன்றும் விளங்கவில்லை. அதுகாறும் வாளா அறையுள் சாய்வு நாற்காலியில் அமர்ந்து ஜயகுமாரனுடைய செயல்களை உற்றுக் கவனித்துக்கொண்டிருந்த சந்திரசேகரப் பிரபு, "ஜயகுமாரரே! இவ்வறையுள் மிகவும் அனலாக இருக்கிறது. மின்சார விசிறியைத் திருப்பி விடுவதால் உமக்கொரு இடைஞ்சலுமில்லையே?" என்று வினவினார்.

ஜயகுமாரன் சந்திரசேகரப் பிரபுவை ஒரு முறை உற்று நோக்கினான். அவனுடைய அகத்திலெழுந்த பல எண்ணங்கள் அவனுடைய முகத்தில் பெரும் மாறுதலை உண்டாக்கியிருந்தன. அவனுடைய கண்களின் ஒளி சந்திரசேகரப் பிரபுவை ஊடுருவிச்சென்றது. "பிரபுவே! விசிறியின் விசையைத் திருப்புங்கள். அறையுள்ளிருக்கும் விளக்குகளையும் ஏற்றுங்கள்" என்றான். அதிகாரத்துடன் கூறிய ஜயகுமாரனுடைய மொழிகளைக் கேட்டு சந்திரசேகரப் பிரபு திடுக்கிட்டார். தான் அறிந்த ஜயகுமாரனுடைய கூரலாக அது தோன்றிற்றில்லை. விளக்கையேற்றிவிட்டு, விசிறியின் விசையையுந் திருப்பிவிட்டு அவர் ஜயகுமாரனை நோக்கினார். அவனுடைய முகத்தை நோக்கியதும் அவர் திடுக்கிட்டு நின்றார். ஒரு புதிய ஒளி அவனுடைய முகத்தில் விளங்க அவர் கண்டார். அவனுடைய கண்கள் விரிந்து ஒளி வீசி நின்றன. அவனுடைய உயர்ந்தகன்ற நெற்றியில் முத்து முத்தாக வியர்வை நீர் மலிந்து நின்றது. அவனுடைய கன்னங்களின் மேல் வியர்வை நீர் தாரை தாரையாக வடிந்து கொண்டிருந்தது. ஒரு காத்

தில் பூதக் கண்ணாடியையும் மறு கரத்தில் மின்சாரக் கை விளக்கையுந் தாங்கி நின்ற ஜய்குமாரனுடைய உருவம் சந்திரசேகரப் பிரபுவுக்கு அச்சத்தையும் ஆச்சரியத்தையும் ஒருங்கேஅளித்தது.

சந்திரசேகரப் பிரபு தன்னைக் கவனித்து நிற்றலை ஜய்குமாரன் ஒரு சிறிதுங் கவனித்தானில்லை. அவனுடைய கருத்து அவ்வறையின் மேல் தலத்தையே நாடி நின்றது. சில நிமிடங்கள் கழிந்தன. உடனே ஜயகுமாரன் பித்தேறியவன் போலும் அறையின் சுவர்களை ஆங்காங்குத் தன்னுடைய விரலால் தட்டிப் பார்த்துக் கொண்டே வந்தான். அச்செய்கை சந்திர சேகரப் பிரபுவுக்குப் பெரும் வியப்பையே அளித்தது. ஒரு முறை சுவர்களை எல்லாந் தட்டி முடிந்ததும், ஜயகுமாரன் அறையின் தரையைச் சிறிது சிறிதாகத் தட்டிப் பார்த்துக் கொண்டே வந்தான். சந்திரசேகரப் பிரபுவுக்கு ஒரு புறம் பெருஞ்சிரிப்பும்மறுபுறம் பெரும் ஆச்சரியமும் மலிந்தெழுந்தன. தரையை ஆராய்ந்தவுடன் ஜயகுமாரன்சிறிது நேரம் அறையின் இடையில் தயங்கி நின்றான். அறையின் நடுவில் நனிவேகத்துடன் சுழன்று கொண்டிருந்த மின்சார விசிறியின் காற்று அவன தங்கத்தின் மீது பாய்ந்தது. வியர்வையால் நனைந்திருந்த அவனுக்கு அக்காற்று பெருங்களிப்பையே ஊட்டியது. தன்னுடைய கைக்குட்டையால் தன்னுடைய முகத்தை நன்றாகத்துடைத்துக் கொண்டு ஜயகுமாரன் சந்திரகேசரப் பிரபுவை நோக்கிப் புன்முறுவல் கொண்டான். சந்திரகேசர்ப் பிரபு என்ன கூறுவதெனத் தோன்றாது திகைத்து நின்றார்.’’

“பிரபுவே! சண்முகசுந்தரப் பிரபு உமக்கெழுதிய கடிதங்களில் ஒன்றிரண்டை இதுகாலை உம்மால் காட்டவொல்லுமா” என வினவினான்.

“ஜயகுமாரரே! இதோ காட்டுகின்றேன்” எனக்கூறி சந்திரகேசரப் பிரபு இருப்புப் பெட்டியைத் திறந்து சில கடிதங்களை யெடுத்து ஜயகுமாரனுக்குக் காட்டினார்.

ஜயகுமாரன் அக்கடிதங்களுள் ஒன்றை யெடுத்து உற்று நோக்கினான். நோக்கியதும் ஆச்சரிய மெய்தினான். தான் சென்ற இரவு மோகன சுந்தரப் பிரபுவின் அறையினின்றுங் களவாடிய கடிதங்களில் கண்ட எழுத்தும் தன் கரத்திலிருந்த கடிதத்தில் காணப்பட்ட எழுத்தும் ஒருவர் எழுதிய எழுத்தாகவே இலங்கின. மீண்டுமொரு முறை அக்கடிதத்தை உற்று நோக்கினான். அவனுக்குச் சிறிது சந்தேகம் பிறந்தது. தன்னுடைய சட்டைப்பையிலிருந்து தான் களவாடிய கடிதங்களை எடுத்து, அவைகளுள் ஒன்றை எடுத்துத் தன் கரத்திலிருந்த கடிதத்தின் அருகில் வைத்துக் கவனித்தான். இரு கடிதங்களிலும், ஒரே வகை எழுத்துக்களைக் கண்டு மருண்டான். பின்னர் தன்னுடைய பூதக் கண்ணாடியை அணிந்து இரு கடிதங்களையும் ஒப்பிட்டு நோக்கினான். அவனுடைய முகம் மலர்ந்தது. “சண்முகம்” என்ற வார்த்தையை இரு கடிதங்களிலும் உற்று நோக்கினான். உண்மை விளங்கியது. சந்திரசேகரப் பிரபு தனக்களித்த சண்முக சுந்தரத்தின் கடிதத்தில் கையொப்பமாக இலங்கிய “சண்முகம்” என்ற வார்த்தைக்கும், அன்று காலை தன்னுடைய அறையின் மேஜையின் மேல் கண்ட கடிதத்தின் இறுதியில் இலங்கிய “சண்முகம்” என்ற வார்த்தைக்கும் உள்ள சிறு வித்தியாசத்தை ஜெயகுமாரன் உற்றுணர்ந்தான். தனக்குக் கிடைத்த கடிதத்தில் கையொப்பமிட்டவன் சண்முக சுந்தரத்தைப் போலும் ‘சண்முகம்’என வரைந்திருப்பினும் அதை சண்முக சுந்தரம் வரையவில்லையென்பதை ஜயகுமாரன் தெளிந்தான். சண்முக சுந்தரத்தின் மீது ஜயகுமாரன் கொண்ட சந்தேகங்கள் மறைந்தொழிந்தன. அது காலையே ஜயகுமாரன் தன்னுடைய விரோதி சண்முக சுந்தரத்தின் பெயரைக் கையாளுமொரு கள்வனல்லால் சண்முக

சுந்தர மல்லை என்பதை ஜயகுமாரன் உணர்ந்தான். உணர்ந்ததும் இருகடிதங்களையுமெடுத்துத் தன் சட்டைப்பையில் அவ்விரு கடிதங்களையும் வைத்துக் கொண்டு "பிரபுவே சண்முகசுந்தரப் பிரவுவின் கடிதங்களில் இக்கடிதம் என்னிடத்திலேயே இருக்கட்டும். எஞ்சிய கடிதங்களை இருப்புப் பெட்டியிலேயே வைத்துவிடும்" என, சந்திரசேகரப் பிரபு அக்கடிதங்களை யெல்லாம் இருப்புப் பெட்டியில் வைத்துப் பூட்டினார்.

"பிரபுவே! இவ்வறைக்கு மேலும் ஓர் அறையுண்டோ?"

"ஆம்."

"அவ்வறை யாருடையது?"

"அவ்வறையிலேயே சாரதா வதிந்து வருகிறாள்."

"அவ்வறையை யான் இப்பொழுது பார்க்க வியலுமா?"

"ஆ! ஆ! அதற்கென்ன என்னுடன் வாருங்கள். யானும்மை அவ்வறைக்கு அழைத்துச் செல்கின்றேன்."

சிறிது நேரஞ் சென்றதும் ஜயகுமாரன் சந்திரசேககப் பிரபுவுடன் சாரதாவின் அறையை அடைந்தான். அடைந்தவுடன், அவ்வறையின் தரையை உற்று நோக்கினான். அவனுக்கொன்றும் புலனாகவில்லை. பின்னர்த் தன் கரங்களைத் தரையிலூன்றி ஆங்காங்குத் தரையைத் தட்டிப் பார்த்தான். பார்த்தவுடன் அவன் எழுந்து "பிரபுவே! உம்முடைய அறையை யான் பார்க்க விரும்புகின்றேன்" என்றான். ஜயகுமாரனுடைய திருவிளையாடல்களை யெல்லாங் கண்டு ஒன்றுந் தோன்றாது திகைத்து நின்ற சந்திரசேகரப் பிரபு ஜயகுமாரனைத் தன்னுடைய அறைக்கு அழைத்துச் சென்றார். சந்திரசேகரப் பிரபுவின் அறையை அடைந்த ஜயகுமாரன் அறையுள் விளங்கிய பொருள்களை கவனிக்கவில்லை. நேராக அவருடைய கட்டிலையணுகி ஆங்கிருந்த தலையணைகளை ஒவ்வொன்றாக எடுத்து முகர்ந்தான். முகர்ந்ததும் அவனுடைய முகம் ஒருவாறு மலர்ந்தது. "பிரபுவே! உம்முடைய விலையுயர்ந்த நகைகள் களவாடப்பட்ட அன்றிரவு நீர் இப்பஞ்சணையின் மீது தானே துயின்றீர்?"

"ஆம்"

"அன்று இவ்வணையின் மீது விரிக்கப்பட்டிருந்த துப்பட்டி எங்கே?"

"ஜயகுமாரரே! அதனைக் கொண்டு வரச் சொல்கின்றேன்." "சரி. நாம்செல்வோம். பணியாளனை அத்துப்பட்டியைக்கொண்டுவரச் சொல்லுங்கள்" என வியம்பி ஜயகுமாரன் மாடியை விட்டுக் கீழிறங்கினான். சிறிது நேரத்தில் ஒரு பணியாளன் ஒரு துப்பட்டியை எடுத்துக் கொண்டுவந்தான். அந்தத் துப்பட்டியை ஜயகுமாரன் முகர்ந்து கொண்டே வர, ஓரிடத்தில் தான் தலையணையில் நுகர்ந்த அதே மருந்தின் வாசனையே வீசக்கண்டான். கண்டதும் அவனுக்கு ஓர் உண்மை விளங்கியதெனினும் அதனைக்கொண்டு ஒருமுடிவுக்கும் வரவியலாதவனாய் ஜயகுமாரன் சிறிது நேரந் தயங்கி "சந்திரசேகரப் பிரபுவே! உம்முடைய இருப்புப் பெட்டியிலிருந்து பணத்தையும் நகைகளையுங் களவாடியவர்கள், நீர் அவைகளை மோகன சுந்தரத்திற்குக் காட்டிய அன்றிரவே நீர் உறங்கிக் கொண்டிருக்கையில், உம்முடைய சாவியை உம்மிடத்திலிருந்து களவாடியே களவாடியிருக்கிறார்கள். நீர் எண்ணுமாப்போல் அவைகள் நீர் இயம்பிய தருணத்தில் களவாடப் படவில்லை."

"ஜயகுமாரரே! நீர் கூறுவது எனக்கொன்றும் விளங்கவில்லை."

"அவைகளின் விவரத்தை யான் பின்னுரைக்கின்றேன். இனி நான் உங்களுடைய பணியாளர்களைத் தனியேபார்க்க எண்ணுகின்றேன். எத்தனைப் பணியாளர்கள் இங்கிருக்கின்றார்கள்?"

"ஆறு பணியாளர்கள்."

"அவர்களை யெல்லாம் இப்பொழுது யான் பார்க்க வியலுமா?"

"தாராளமாகப் பார்க்க வியலும். அவர்களை ஒவ்வொருவராக இங்கு அழைக்கட்டுமா?"

"பிரபுவே! வீட்டுள் வேலை செய்கிறவர்களை யான் முதலில் பார்த்தல் வேண்டும்."

"வீட்டுள் நான்குபேர் வேலை செய்கின்றார்கள். அவர்களுள் ஒரு பையனும் ஒருசிறு பெண்ணு மிருக்கின்றார்கள். அவர்களிருவரும் சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்னர், சில்லரை வேலைகளைச் செய்வதற்காக அமர்த்தப்பட்டவர்கள். எஞ்சிய இருவரில் ஒருவன் சமயல்காரன்; மற்றவள் எஞ்சிய வேலைகளைச் செய்பவள். அவ்விருவர்களும் எத்தனையோ ஆண்டுகளாக இங்கு, என்னுடைய அன்னை காலத்தொட்டு இருந்து வருகின்றார்கள்; மிகவும் யோக்கியர்கள்."

"பிரபுவே! இந்நால்வரைத் தவிர்த்து எஞ்சியவர்கள் யார்?"

"காவற்காரனும், தோட்டக்காரனுமேயாவர்"

"தோட்டக்காரனுக்கு வீட்டுள் வர வேண்டிய காரியமொன்றும் இல்லையல்லவா?"

"இல்லை"

"ஆனால் காவற்காரன்.......,"

"ஜயகுமாரரே! அவன்தான் இரவில் கதவங்களை யெல்லாஞ் சாத்தித் தாளிட்டு இரவு முழுவதுங் காவல் புரிபவன்."

"அவன் எத்தனை யாண்டுகளாக இங்கு வேலை செய்து வருகிறான்?"

"சென்ற இரண்டு ஆண்டுகளாக"

"அவன் அதற்கு முன்னர் எங்கு வேலை செய்துகொண்டிருந்தான்?"

"சென்னையில் தயாநந்தலால் என்னும் ஒரு பெரிய மார்வாடியிடத்தில். அவருடைய நற்சாக்ஷிப் பத்திரத்தைக் கண்டே நான் அவனை இங்கு அமர்த்திக்கொண்டேன். அவன் சென்ற இரண்டு ஆண்டுகளாக மிகவும் உண்மையாக இருந்து வருகிறான்."

"பிரபுவே! உமக்குப் பெரிதுங் கஷ்டமளித்தேன். இன்றிரவு நான் சென்னைக்குச் செல்ல எண்ணுகின்றேன். இன்று நான் உங்களிடம் பேசியவைகளை யெல்லாம் இரகசியமாகவே வைத்துக் கொள்ளுங்கள். நான் நாளைமாலை இயன்றால் உம்மைப் பார்க்கின்றேன். ஆனால், போவதன் முன்னர் ஓர் உண்மையை யான் உங்களுக்கியம்ப விரும்புகின்றேன் சந்திரசேகரப் பிரபுவே! மோகன சுந்தரம் குற்றமற்றவன்."

உடல் நுட்பம்

[ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்]

III

நினைவு, அறிவு, புலனுணர்வு, இச்சை, விருப்பு வெறுப்புகளுக்குப் பிறப்பிடம்மூளை. மூளை அப்பளமா நிறமுள்ளது; மண்டையோட்டினுள் உருண்டை உருண்டையாய்த்தோன்றமடங்கியமைந்தது. ஒவ்வோ ருருண்டையும் பலநாடி நாளங்கள் சூழ, ஒருதிட்டமான வேலையை முாணின்றிச்செய்கிறது. மூளைமிக மெல்லியது. அதனால் அதற்கு உரத்த மண்டையோடு மூடப் பட்டுள்ளது. வளர்ந்த மனிதன் மூளை சுமார் 3 ராத்தல் இருக்கும். தனது நிறையில் 1/40 மூளை மனிதனுக்கு; யானைக்கு 1/500; திமிலங்கத்திற்கு 1/300. அதனாலேமனிதன் அறிவிற்சிறந்தோன் (1) உச்சிமூளை (Cerebrum), (2) துணைமூளை (Cerebellum) (3) நடு முடிச்சு (Medulla Oblongata) என்று மூளையில் மூன்று வகை. உச்சிமூளை முழு மூளையில் 7/8 பங்கு. இதிலேயே மனத்தின் இருப்பும், நினைப்பின் பிறப்பும். மூளையில் மடிப்பு மிகுதி, அறிவு மிகுதியைக்

காட்டும். விலங்குகளுக்கு மூளை வறக் குறைய வழுக்கையாயிருக்கும். மனித மூளையின் மடக்குகளை யெல்லாம் உரித்தால் சுமார் 670 சதுர அங்குலம் இருக்கும். மூளையின்றி உயிர்க்கலாம்; மூளையை அறுத்து நீக்கிய தவளை உயிர்க்கிறது; ஆனால் அறிவும் உணர்வும் இரா. மூளை வறண்டு போகாது ஓர் ஈரச் சவ்வு (Serous Membrane) மூடிக்கொண்டிருக்கிறது. துணை மூளை (Cerebellum) பிடரியிலுள்ளது. இதில் வெண்ணிற நரம்புகள் நிரம்பியுள்ளன. இது பார்வைக்குக் கதர் நூற்கண்டு போலிருக்கும். ஆனால் உள்ளே செடிபோலக் கிளைத்திருக்கும். இது தசைகளை ஆளுகிறது. நடு முடிச்சு (Madulla Oblongata) நடு நரம்பை மூளையோடிணைக்கிறது. இது கோலிபோன்று மேலே வெளுத்து, உள்ளே சாம்பல் நிறந்தோடுள்ளது. இதன் மேற்பகுதி கேடுறின் அறிவிழக்கும்; கீழ்ப்பகுதி கேடுறின் மூச்சும், இதயமும் நின்று சாவு நேரிடும்.

மூளையிலும், நடுமுடிச்சியிலு மிருந்து, 12 ஜோடி நரம்புகள் மூக்கு, நாக்கு, காது, கண், தோல் முதலிய புலனறி கருவிகளுக்கு, மண்டையோட்டினடியிலிருக்கும் ஒன்பது துளைகள் வழியே செல்லுகின்றன. முதல் ஜோடி நரம்புகள் நாற்ற நரம்புகள் (Olfactory Nerves) இவைமூக்கில்நிறைந்து, மணமறிவிக்கும்.

2-வது, ஒளி நரம்புகள் (Optic Nerves) கண்ணுக்குச்சென்று பார்வை தரும். 3, 4, 6, கண்ணியக்கும் நரம்புகள் (Movers of the Eye) இவற்றால் விழி சுழலும்; இமை கொட்டும். 5-வது ஜோடியில் ஒன்று தொண்டை நரம்பு. மற்றொன்று நாவில்பரவும் சுவைநரம்பு. 7-வது முகநரம்பு முகத்தசைகளை இயக்கும். 8-வது ஒலிநரம்பு, செவியிற் பரவும். 10-வது நேநேரம்பு (Wandering Nerves) இது தொண்டை உயிரி, இதயம், இரைப்பை, ஈரல்முதலிய உறுப்புக்களிற் பரவும். 11-வது கழுத்து நரம்பு; கழுத்து முதுகுத்தசைகளையாளும். 9-வது அடிநாநரம்பு. இதில் ஒன்று அடிநாக்கிலிருந்து சுவை யறிவிக்கும். மற்றொன்று உணவை விழுங்குந் தசையிற் படரும். 12-வது பேச்சுநரம்பு நாவிற்பரவிப்பேச இயலுவிக்கும்.

நடுநரம்பு (Spinal Cord) இது நடுமுடிச்சினின்று (Apex) தொடங்கி, முதுகெலும்பு அடுக்குகளூடு செல்லும். இது சுண்டுவிரல் பருமனில் 16" நீளமுள்ளது. இதை மூளையின் நீட்சியென்றே சொல்லலாம். இதினின்று இருபுறமும் 31 ஜோடி நரம்புகள் பிரிகின்றன. ஒவ்வொன்றும் இரண்டாக முதுகெலும்பின் முன்னும் பின்னும் பிரிந்தோடி, முடிவில் ஒன்று சேருகிறது. பின்னரம்புகள் ஊறு (Feeling) அறிவிக்கும். இந்நடு நரம்பின் எந்த இடம் அறுந்தாலும் அதற்குக் கீழே யுணர்விராது; உறுப்புகள் வணங்கா; தந்திக்கம்பி அறுபட்டாற்போலத்தான். இதனிடைப் பிரியும் நரம்புகள் கூந்தலாக, உடலெங்கும் பரவி உணர்வை மூளைக்குத் தெரிவிக்கும். உயிர்த்தல், இருமல், மூக்குச்சிந்தல், முதலியஎல்லாக் கட்டாயஇயக்கங்களும் (Reflex actions) இந்த நரம்புகளால் ஆளப்படுகின்றன. இந்த நடுநரம்புத் தொகுதியுடன் (Central Nervous System) துணை நரம்புத் தொகுதிகள் (Sympathetic Nervous System) உள்ளன. இவை முள்ளந் தண்டின் முள்ளெலும்புகளுக் கிடையே முடிச்சு முடிச்சாகச் சங்கிலிக் கோவைபோல எல்லா உறுப்புக்களிலும் பரவுகின்றன. இதயம், உயிர், குடல், இரைப்பை, நாடிக்குழாய்கள் எங்கும்பரவுகின்றன. இந்நரம்புகளை இச்சாசக்தியால் (Will) எப்படிவேண்டுமெனினும் பயிற்றலாம். பயிற்சிக்கேற்ப உயர்ச்சி சுத்த ரத்தத்தில் 1/10 மூளைக்குச் செல்லுகிறது. ஓய்வும், உழைப்பும், அளவாயிருத்தல் மூளைவளர்ச்சிக்கு நல்லது. இயமநியம சாதனம் மூளையை ஒளிபெறச்செய்யும். ஜபம், தியானம், பிராணாயாமம் இவை மூளையை ஒருகூறுக்கி வலிவுறுத்தும்.

கவலை, தீயநினைப்பு, பொறாமை, சூது வாதுகளால் மூளை வலு விழக்கும்.

தட்பவெப்பம், மென்மை கடுமையுணர்வை நரம்புகளே ஆங்காங்கிருந்து உடனுடன் அறிவிக்கின்றன. நரம்பே நாக்கிற் சுவைக்கிறது; மூக்கில் முகர்கிறது. மூக்கின் நீளத்திற்குத் தக்கபடி முகரும் ஆற்றல் மிகும். செவிப்பதும் நரம்பால். காற்றால் ஓசைகேட்கிறது. காற்றின்றி ஒலியில்லை. ஓர் இமைப்பில் 1100அடி 1/5 மைல் ஒலிபரவும். காதின் நடுவே செவிப்பறை (Drum of the Ear) உள்ளது. இதன்பின் நான்கு நுண்ணெலும்புகள் உள்ளன. இவையே பறை சாற்றுவன. இதில் ஒலி தாக்கியவுடன் கேட்கிறோம். இவற்றிற் கப்பால் உருண்டு வளைந்து உட்காது உள்ளது. இதிலுள்ள நரம்புகளே ஒலியை மூளைக்கு அறிவிக்கின்றன.

உரு, நிறம், தோற்றங்களைக் காண்பது கண். ஒளியால் பார்வை இயலுகிறது. ஓர் இமைப்பில் 1915000 மைல் ஒளி செல்லுகிறது. கட்குழியில் (Socket) கண் உருண்டையாக வைக்கப்பட்டுள்ளது. கண், ஒளிப்படக்கருவி (Photographic Camera) போன்றது. கண் மூன்று சவ்வுகளுடைத்து. (1) வெண்விழியும் கண்ணாடியும் இவைகளில் கண்ணீர் ஊறுகிறது. (2) இடைச்சவ்வு. இது கறுத்து நாடி நாளம் நிரம்பியது. கறுத்து வட்டமாயிருப்பது நிறங்களைப் பிரித்து அறிவிக்கும் நிறவிழி (Iris). இதனடுவே கண்மணியுள்ளது. (3) உள்வழி. இது நரம்புகள் மல்கிப் பார்வை உணர்வை யுண்டு பண்ணுகிறது. இதில் பளிங்கு நீர் (Vitreous Humour) என்னும் தெளிநீர்உள்ளது. கண், உறுப்புகளில் முதன்மையானது. அதைக் கருத்துடன் தூய பழக்கங்களாற் காக்க வேண்டும்.

௧௨. முடிவுரை

அன்பர்களே! இத்தகைய அருமையான வெகு நுட்பமான, அற்புதமான மாளிகையில் "நான்" எனும் நமது தத்துவம் கோயில் கொண்டுள்ளது. இவ்வுடல் வியப்பு அதன் புறக்கோட்டை. இதைத்தாண்டி உள்ளே சென்றால் இன்னும் நுண்ணிய அற்புதங்கள் பலப்பல. இவற்றைப் படைத்த இயற்கையைப் பணிமின்! இயற்கையை இயக்கும் இறைவனைப் பணிமின்!

உடலைப் போற்றுக உடலைப் போற்றுக!
கடவுட் கோயிலென் றுடலைப் போற்றுக!

கற்றவர் மடமை

(வில்லியம் ஹாஸ்லிட் என்னும் ஆங்கிலப் புலவரின் கட்டுரையைத் தழுவியது)

[திரு. ர. சாரங்கபாணி]

I

மக்கட் கூட்டத்துள் மிகவுங் குறுகிய கருத்துரிமை யுடையவர்களே ஆசிரியர் களென்றும், கற்பவரென்றும் அழைக்கப்படுவர். மற்றொரு காரியத்தையுஞ் செய்ய இயலாது தவித்தலைவிட, எழுதவும் படிக்கவுந் தெரியாம லிருத்தலே மிகவும் நன்றாகும். ஒரு புத்தகத்தைக் கையிலேந்திச் சோம்பித் திரிபவன், தன் கண்முன் இலங்கும் இயற்கை வனப்பையும், தனதுள்ளத்தில் பரிணமிக்கும் எண்ணங்களின் தன்மையையும், அறிதற்குரிய ஆற்றலற்றவனேயாவன். அத்தகையவன் தன்னுடைய அறிவை, தன்னுடை பையிலேனும் இன்றேல், தன்னுடைய விலையுயர்ந்த புத்தகங்கள் அணியணியாக வகுக்கப்பட்டுள்ள புத்தகக் கருவூலத்திலேனும் வைத்துள்ளான் எனக் கூறலே அமைவுடைத்து. அவன் எதாவது ஒரு விஷயத்தைப் பற்றித் தர்க்கிக்கவும், தான் புத்தகத்தினின்றும் வாசித்தறி

யா ஒரு புதியவிஷயத்தைப்பற்றிப் பேசவும் அஞ்சுகின்றான்; சிந்திக்க அவன் பின்னடைகின்றான்; பழக்க மின்மையால் சிந்தனையின் உதவியையும் அவன் இழக்கின்றான்; அந்தமிலாச் சொற்களின் தொடர்ச்சிகளும், முற்றும் அமைக்கப்பெறாத உருவங்களும், அவனுடைய மனவெளியில் ஒன்றன்பின் ஒன்றாக ஒன்றை மறைத்து மற்றொன்றெழ, அவன் அமைதியுடன் அமர்கின்றான்.

கல்வி பெரும்பாலும் இயற்கை அறிவிற்கு முட்டுக்கட்டையாகவும் மெய்ஞ்ஞானத்தின் பதிலாகவும் மாறி விடுகின்றது. புத்தகங்கள், இயற்கை எழிலை உய்த்துணர்ந்திடுவதற் கெனத் தோன்றிய கண்ணாடிகளாக உபயோகப்படுத்தப்படுவதினும், அதிகமாக அவ்வியற்கையின் ஒப்பற்ற வனப்பையும் மாறிமாறிப் புலனாகுங் காட்சிகளையும் ஊனக் கண்களினின்றும் குறுகிய ஆற்றலினின்றும் மறைத்திடுந் திரைகளாக உபயோகிக்கப்படுகின்றன. புத்தப் புழு, பொதுமைப் பொருள் என்னுங் கூடால் தன்னை மறைத்துக் கொண்டு மற்றவர்களின் உள்ளங்களிலிருந்து பரிணமிக்கின்ற பொருள்களின் சாயைகளையே கண்ணுறுகின்றது. இயற்கையும் அவனை உதறித் தள்ளுகின்றது. மாறுபாடுடைய பதக் கோவைகளின் நூற்கப்பட்ட விரிவுகள் விலக்கிய, உண்மையான பொருள்களின் பிம்பங்களைக் காணுந்தோறும் அவன் நடுக்குறுகின்றான்; அவைகளின் பேதங்கள் அவனை மயக்குகின்றன. அவைகளின் வேகம் அவனுக்குக் களைப்பை மூட்டுகின்றது. எனவே, அவன் தன்னைச் சுற்றிலும் இலங்கும் உலகின் வேகம் என்னுஞ் சுழலினின்றும், அதன் ஓங்கார ஓசையினின்றும், அதன் கடிவேக மாறுதல்களை ஓர்ந்துணரும் கண்களும், உணர்வு மின்மையால், இறந்து பட்ட பாஷைகளையும், மயக்கில்லாது அறிவை யூட்டுகின்ற எழுத்துக்களின் தொகுதிகளையும் நாடுகின்றான். "என்னுடைய அமைதியில் என்னை விட்டுவிடு" என்பது இறந்து பட்டவர்களும் உறங்குகின்றவர்களும் நாடும் முது மொழியாகும். முடக்கு வியாதியால் பீடிக்கப்பட்டவர்களை "நாற்காலியினின்று எழுந்திரு" என்னுந் தெய்வீகத் தன்மை யில்லாது "உன்னுடைய ஊன்றுகோலை எறிந்து விட்டு உன்னுடைய படுக்கையை எடுத்துக்கொண்டு நட" என்று கூறினாலுங் கூறலாம், ஆனால், நூற்கல்விப் பயிலுபவரை "உன்னுடைய புத்தகத்தை யெறிந்து விட்டுச் சுயேச்சையாகச் சிந்தனை செய்" என்று கூறவே ஒல்லாது. அவனுடைய அறிவின் உதவிக்காக அவன் அதனைப் பற்றித் தவிக்கிறான். அதனுடைய உதவியல்லாது தனித்து நிற்றல் ஆகாயமுமற்ற அந்தரம்போலும் அவனுக்கு அச்சத்தை யளிக்கின்றது. கற்றவர்கள் சாதாரண வாயுவை சுவாசிப்பதைப் போல் அவன் கல்வியென்னுங் காற்றையே சுவாசிக்க இயலும். அவன் அறிவைக் கடன் வாங்குகிறவன். சுயேச்சையாக உய்த்துணர்ந்த எண்ணங்களை அவன் மறந்தும் அறியான். மற்றவர்களுடைய எண்ணங்களைக் கொண்டே அவன் வாழ்கின்றான். வெளியூற்றுக் களிலிருந்து நம்முடைய எண்ணங்களைக் கொள்ளும் பழக்கம் நம் சிந்தனையின் வலிமையைக் குறைத்து விடுகின்றது. மனமாகிய யந்திரம் பழக்கத்தினாலும், அந்தகாரத்தினாலும் துரும்பேறிவிடின், சிந்தனை செய்வதற்கும், தொண்டாற்றுவதற்கும் உபயோகப்படுத்த வியலாது மங்கி விடுகின்றது. அறியாத ஒரு பாஷையைப் பயிலுவது போலும், ஊக்கமளியா வரிகளையும் வார்த்தைகளின் பகுதிகளையும் கண்சோர்ந்து கையினின்றும் புத்தகம் நழுவிடுங்காலும், வாசித்தறியும் அறியாமையும் சோம்பலும் நிறைந்த ஒரு வாழ்க்கையின் இயல்பைக் கண்டு வியக்கவும் ஒல்லுமோ? இவ்வாறு கனவிற்கும் விழிப்புக்கும் இடையில் இடிப் புண்டு வாழும் வாழ்க்கையினும், நாள் முழுமையும் வேர்வைமிக உழைத்து இரவில்

பேரின்ப வீட்டின் நுகர்ச்சியைப்போ லிலங்கும் அயர்ந்த நித்திரையை அளிக்கும் கட்டைப்பெட்டியின் வாழ்க்கையை நான் விரும்புவேன். ஒரு படித்த ஆசிரியன், ஒருபடித்த மாணவனைவிட ஒரே விஷயத்தில் மாறுபடுகின்றான். ஆசிரியனோ மாணவன் படித்தற்குரிய விஷயங்களை மீண்டும் எழுதுகின்றான். படித்தவர்கள் நூற் கல்வியின் பணியாளரே யாவர். தங்களுடைய சுய அறிவைக் கொண்டு ஒரு கட்டுரையை வரையுமாறு அவர்களை வேண்டினால், அவர்களுடைய தலை சுற்றுகின்றது. அவர்கள் எங்கிருக்கின்றார்கள் என்று அவர்களே அறியார்கள். இயற்கையி லிலங்கும் உயிருள்ள உருவங்களை எழுத முயலும்போது, கூரிய பார்வையும் அமைதி மிகுந்த கைகளும், ஒளிரும் நிறங்களுமின்றி, படங்களைப் பார்த்தெழுதுபவரும், வெறுப்பில்லாது புத்தகங்களை வாசிப்பவர்களும் ஒரே நிலையிலிருப்பவர்களாவர்.

தற்காலக் கல்வி முறையில் தேர்ந்தவனொருவன், முழு மூடனாக மாறாதிருப்பின், அவன் தலை தப்பியது தம்பிரான் புண்யமென்றே எண்ண வேண்டும். வகுப்பில் பெரும் பெயரெடுக்கும் சிறுவர் உலக மேடையில் பெரும் பெயரெடாரென்பது உலக வழக்கு. ஒரு சிறுவனுக்குப் பள்ளியில் புகட்டப்படும் கல்வி முறையும், அவனுடைய வெற்றியைக் குறிப்பிடும் நியதிகளும் மிகவும் உயர்ந்த உள்ளக்கருவிகளின் உதவியைப் பற்றினவல்ல. இலக்கணம், பாஷைகள், கணிதம், உலக சாத்திரம், இவைகளை மனப் பாடஞ்செய்து ஒப்பிக்க ஆங்குப் பேருதவியாற்றி நிற்பது ஞாபகசக்தியேயாகும். எனவே, இயற்கை யுணர்ச்சியின்றி யமையாத மற்ற சக்திகளற்று, இந்த ஞாபகசக்தியையுடையவன், பள்ளியில் பெரும்பெயரெடுப்பான். மற்ற விஷயங்களை அறிய ஆற்றலும் அற்றவர்களாய் அவ்வாறு செய்யவேண்டும் என்ற வற்புறுத்தலும் இல்லாம லிருந்தால், பத்தாண்டுகள் நிறைந்த சிறுவனுக்கு வார்த்தையின் வகுப்புகளைப்பற்றிய மந்திரங்களிலும் வாய்ப்பாடுகளிலும் அவனுக்குச் சிறிதும் ஊக்கமிரா தென்பது தேற்றம்.

இ டி யே று

அடிகளின் விரதம்

பற்பல காரணங்களையொட்டி விரதம் அனுஷ்டிக்கப் படுவது வழக்கம். நமது நாடு விரதத்திலே பேர் பெற்றதென்பது வெள்ளிடைமலை. நமது நாட்டுக் கலைகளுள் விரதத்தைப் பற்றிப் பேசாதன மிக அருமை. விரதத்தைப் பற்றிய கதைகள் நமதுநாட்டில் ஏராளமாக உண்டு. பண்டை முனிவார்களெல்லாரும் விரதத்தாலேயே தத்தம் விருப்பத்தை நிறைவேற்றிக் கொண்டார்கள். அத்தகைவிரதத்தின் மாண்பு நாளடைவில் நாட்டில் குலையலாயிற்று. இதற்குக் காரணம் நாட்டுக் கல்வியின் அழிவும், தற்கால நாகரிகமுமே யாகும். இருள் சூழ்ந்த இந்நாளில் உலகம் போற்றும் ஒருவர் விரதமிருத்தல் விரத உலகத்தை மீண்டும் உயிர்ப்பிப்பதாகும்.

காந்தியடிகள் பல முறை விரதமிருந்தது உலகுக்குத் தெரியும். அவர் ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு காரணம் பற்றியே விரதமிருந்தார். இம்முறை தமது ஆத்ம சுத்தங் கருதி அவர் விரதத்தில் தலைப்பட்டுள்ளார். தலைப்பட்டுப் பதினெட்டு நாட்களாயின. இன்னும் எஞ்சியுள்ள நாட்கள் மூன்றே. அடிகள் விரதத்தை வெற்றியுடன் முடித்து வீறுடன் எழுவார் என்பதில் ஐயமில்லை.

காந்தியடிகளுக்கு எப்பொழுதும்தேக சக்தியில் நம்பிக்கையில்லை என்பதும்,

ஆத்ம சக்தியிலேயே நம்பிக்கை உண்டு என்பதும் உலகறிந்தனவாம். காந்தியடிகள் ஆத்ம சக்தியை அடிப்படையாகக் கிளத்தியே ஒவ்வொரு போரையும் நிகழ்த்தி வந்ததை நேயர்கள் அறிவார்கள். உலோகாயதத்தில் மூழ்கியுள்ள இவ்வுலகை ஆத்மசக்திவழியில் திருப்ப வேண்டுமென்றே காந்தியடிகள் முயன்று வருகிறார். அவர்தம் முயற்சி மெல்ல மெல்ல வெற்றியளித்தே வருகிறது. இப்பொழுது காந்தியடிகள் மேற்கொண்டுள்ள விரதம், உலக கவனத்தை ஈர்த்து நிற்பதொன்றே, அவர் இதுகாறும் ஆத்ம சக்தியில் பெற்ற வெற்றிக்கு அறிகுறி என்று சொல்ல வேண்டுவதில்லை. இன்னும் அவர் தமது ஆத்மசக்திக்கு ஆக்கந்தேட இப்பொழுது விரதம்மேற்கொண்டுள்ளார்.

இவ்விரதத்தை முற்றுவித்து அடிகள் தொண்டில் தலைப்படுவதற்குள் அவர் தந் தொண்டிற்கு முன்னணி வேலைகள் சில நடைபெறுதல் வேண்டும். அவ்வேலைகள், பிரிட்டிஷ் அரசாங்க வாயிலாகவும், இந்திய தேசமக்கள் வாயிலாகவும் சிறப்பாக நடைபெறுதல் வேண்டும்.

பிரிட்டிஷ் அரசாங்கம் காந்தியடிகளை ஓர் அரசியல் கிளர்ச்சிக் காரராகக் கருதுவதால் பல தொல்லைகள் நேர்கின்றன. அடிகளின் அஹிம்சா தர்மப் போரும், விரதமும், இன்ன பிறவும் அரசாங்கத்தின் ஐயப்பாட்டை இப்பொழுது நீக்கி யிருக்குமென்றே நம்புகிறோம். ஆகவே, இனி அரசாங்கம் காந்தியடிகளை அரசியல் கிளர்ச்சிக்காரராகக் கருதாமலும், சிறைக் கோட்டத்தில் புகுத்தாமலும், அடிகளுடன் கலந்து கடனாற்றினால் இந்தியாவுக்கும் நலன் விளையும்; பிரிட்டனுக்கும் நலன் விளையும்.

இந்தியா தேசம் தனதியல்புக்குப் பொருந்தாத ஹிம்சையில் நாட்டங் கொள்ளாது, காந்தியடிகள் வழி நிற்க உறுதி கொள்வது சிறப்பு. இந்தியா தேசம் தன்மாட்டுள்ள குறைபாடுகளைப் போக்கவும் முயன்று வருதல் வேண்டும். ஜாதி பேதமும், வகுப்பு வாதமும், தீண்டாமையும் தன்னை அடிமைக் குழியில் வீழ்த்தியிருத்தலை இந்தியா உணர்ந்து நடத்தல் வேண்டும். தீண்டாமையை ஒழிக்கக் காந்தியடிகள் செய்து வரும் முயற்சிக்கு இந்தியா போதிய அளவு துணை நின்று வருகிறதா என்பதை உலகங் கவனியாமலில்லை. தீண்டாமை விரும்பும் ஒரு தேசம் விடுதலை அடைதல் அரிது. உண்மையாக இந்தியா விடுதலையை விரும்பின், தீண்டாமையை ஒழிக்க அது முற்படல் வேண்டும். தீண்டாமை என்னும் ஒரு குற்றத்தை ஒழிக்க இந்தியா ஒரு முகமாக முன் வரின், காந்தியடிகள் விரதம் ஒருவித புதுசக்தியை இந்தியாவிற்கு உண்டு பண்ணியிருக்கிறதென்று உலகங் கொள்ளும்.

காந்தியடிகள் தமது உடலையும் உயிரையும் ஆண்டவன் திருவடியில் கிளத்தியே விரதமிருக்கிறார். ஆண்டவன் அவரைக் காப்பாராக.

ஜோதிடம்

ஸ்ரீமான் கிருஷ்ணசாமியின் ஜோதிட விளம்பரம் மற்றோரிடத்தில் வெளியிடப் பட்டிருக்கிறது. ஸ்ரீமான் கிருஷ்ணசாமி ஒரு சிறந்த ஜோதிடப் புலவர். ஆங்கிலத்திலும் வடமொழியிலும் உள்ள பல ஜோதிட நூல்களை ஆராய்ந்து அவர் அத்துறையில் தெளிவுபெற்றிருக்கிறார். ஸ்ரீமான் கிருஷ்ணசாமி சொல்லும் பலன்களிற் பெரிதும் தவறுதல் நேர்வதில்லை என்பதை நேரில் பல முறை கண்டிருக்கிறோம். நேரிய முறையில் ஜோதிடக் கலையை ஆய்ந்து உணர்ந்துள்ள கிருஷ்ணசாமியின் திறமையையும் புலமையையும் தமிழர்கள் பயன்படுத்தல் நலம்.

நவசக்தி

பெரிய புராணம்

மூலமும்

அரும்பத விசேட ஆராய்ச்சிக் குறிப்புரையும்

வசனமும்

சஞ்சிகை சஞ்சிகையாக வெளிவருகின்றன

ஏழை மக்கட்கு நல்ல சந்தர்ப்பம்!

சேக்கிழார் பெருமான் திருவாய் மலர்ந்தருளிய திருத்தொண்டர் புராணமென்னும் பெரிய புராணத்தைப் பற்றித் தமிழ் மக்கட்கு விரித்துக் கூற வேண்டுவதில்லை. பெரியபுராணமெங்கும் பத்திச் சுவை நனி சொட்டிக் கொண்டிருத்தல் வெள்ளிடைமலை. தன்னை ஓதுவோரையும் கேட்போரையும் அன்புக் கடலில் திளைப்பிக்கும் பேராற்றல் வாய்ந்தது பெரிய புராணம். கடவுள் அன்பு, ஆன்ம நேயம், திருத்தொண்டு, சீர்திருத்தம், சொல் நயம், பொருள் நயம், தமிழின்பம் முதலியவற்றிற்குப் பெரிய புராணம் ஒரு வைப்பு என்று கூறல் மிகையாகாது. சிறந்த தமிழ்க் காவியங்களுள் பெரிய புராணமும் ஒன்று என்று சுருங்கச் சொல்லலாம்.

இத்தகைய அரும்பெரு நூலின் மூலமும், "நவசக்தி" ஆசிரியர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் எழுதிய அரும்பத விசேட ஆராய்ச்சிக் குறிப்புரையும் வசனமும், அன்பர்கள் எளிதில் வாங்கிப் பயன்பெறும் பொருட்டு மாதந்தோறும் சஞ்சிகை உருவில் வெளிப்படுத்தப் படுகின்றன.

ஓலைப் பிரதிகளைக்கொண்டு மூலம் ஒப்பு நோக்கப்படுகிறது. பொருந்திய பாடபேதங்கள் குறிக்கப்படுகின்றன. [illegible] ஆண்டுகளுக்குமுன் வெளிவந்த பதிப்புக்கும் இப்பதிப்புக்கும் பலதிற வேற்றுமைகளுண்டு. குறிப்புரை, பதவுரை போலத் துணைசெய்யும். இக்காலத்துக்கு இன்றியமையாத ஆராய்ச்சி விசேடங்களும் பொறிக்கப்படுகின்றன.

சுமார் 25 சஞ்சிகையில் புத்தகம் முடிவு பெறலாம். பின் விலை புத்தகம் ஒன்று 7 ரூபாய்க்கு மேலாகும்.

அன்பர்கள் உடனே சந்தாதாரர்களாகச் சேர்வார்களாக.

சந்தா விவரம்

புத்தக முழுவதற்கும் முன்பணம்—சென்னை		ரூபா 5.
,, ,, ,,	வெளியூர்—தபாற் செலவுடன்	,, 6.

மாதச் சஞ்சிகை ஒன்றன் விலை அணா 4—சென்னைக்குமட்டும்.

6 சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்புவோருக்கு ஒரு சஞ்சிகை அதிகமாக அனுப்பப்படும்.

காரியஸ்தர்:—முருகவேள் புத்தகசாலை,
12, கணபதி முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

வித்வான்
க. சண்முகக் கவிராயரின் **மகாபாரதம் தமிழ் வசனம்**

திருத்தமான உயர்ந்த பதிப்பு. இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்டு கலிகோ பயிண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூபா 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வம் அடங்கியது ரூபா 5. மற்றவை அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ்,
323, திருவொற்றியூர் ஹைரோட், வண்ணாரப்பேட்டை, மதராஸ்.

வெள்ளி பஸ்பம்

வெள்ளை, வெட்டை, மூலங்கள், எலும்புருக்கி, நீரிழிவு, ஷெ சம்பந்தகுன்மம் பெரும்பாடு எல்லாம் தீரும். தளர்ந்த தாது வலுக்கும். மற்ற நோய்களுக்கும் மருந்துண்டு. வியாதியின் விபரம் எழுதினால் தக்க பரிகாரம் மருந்துடன் தெரிவிக்கப்பெறும். 5 நாளில் நிச்சயம் குணம் தெரியும். 40 நாள் மருந்தின் விலை ரூபா 2-8-0.

விலாசம் :—

சே விசுவநாத செட்டியார்,
வைத்யம், லாலுகுடி, திருச்சி ஜில்லா

இதோ! தாது புஷ்டி
மதனமஞ்சரி

இம் மாத்திரைகள் 35 வருஷங்களாய் உலகமெங்கும் புகழ் பெற்றவை. இது பலவீனம், மலச்சிக்கல், ஞாபகக் குறைவு, நரம்புத் தளர்ச்சி முதலிய வியாதிகளைப் போக்கி நல்ல ரத்த விருத்தியும் தாதுபுஷ்டியும் கொடுத்து இல்லற வாழ்க்கையில் இன்பத்தையும் ஊக்கத்தையும் தரும். 40 மாத்திரைகளடங்கிய டப்பி விலை ரூபா 1.

இனம்! வைத்திய வித்தியா இனம்!!

விபரம் வேண்டுவோர் இனமாய் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

மதன மஞ்சரி பார்மசி
1/94, சைனபஜார், மதராஸ்.

ஏஜண்டு :—

M. S. மலீ ,K B அண்டு கோ.
No. 14, டத்தோகிராமாட் ரோட்'
பினங்கு.

T. D. மதுர நாயகர் அண்டு கோ.,
No. 211, செட்டித்தெரு, கொழும்பு.

ஆனந்த மெடிகல் ஹால்.
No. 165, செட்டித்தெரு, கொழும்பு.

வரப்பிரசாதம்

தேக அசதி, மலச்சிக்கல், ஞாபகக் குறைவு, நரம்புகளின் தளர்ச்சி, கபும் ஸத்வம் முதலிய வியாதிகளைப் போக்குவதில் எங்கள்,

ஆதங்கநிக்ரஹ மாத்திரைகள்

வரப்பிரசாதம் போன்றவை. மேலும் தேகத்தை வஜ்ர சரீரமாகச் செய்யும். 32 மாத்திரைகளடங்கிய டப்பி 1 க்கு ரூபா 1. 5 டப்பிகள் ரூபா 4.

இனம்! கேட்லாக் இனம்!!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

கெர்ப்ப எண்ணெய்

பெண்களுக்குண்டான பொறுக்கமுடியாத வயிற்று வலியையும், சூதக சம்பந்தமான கெடுதல்களையும் நீக்கி சந்தான விருத்தியைக் கொடுக்கும். ஒருமுறை பரீட்சியுங்கள். அநுபவத்தில் கைகண்டது.

புட்டி ஒன்றுக்கு ரூபா 2.

ஏராளமான நற்சாட்சிகள் பெற்றது

C. மலையப்பசாமி,
நித்தியானந்த வைத்தியசாலை,
பழநி S. I.

ஆனந்நாதி ஆனந்த அட்சயாந்த
73-வருட பஞ்சாங்கம்

விலை ரூபா 7.

முருகவேள் புத்தகசாலை,
இராயப்பேட்டை, சென்னை.

"நவசக்தி" ஆசிரியர்

திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தர முதலியார்

இயற்றிய நூல்கள்

தமிழ் மணம் வேண்டுமா, விடுதலை வேண்டுமா,
பெண் ணுரிமை வேண்டுமா,
தீண்டாமை யொழிதல் வேண்டுமா,
சமரசம் வேண்டுமா, சன்மார்க்கம் வேண்டுமா,
இயற்கை யின்பம் வேண்டுமா,
வீரச்சுவை ததும்பப் பேசவும் எழுதவும் வேண்டுமா?

வேண்டுமானால்

"நவசக்தி" ஆசிரியர் திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தர முதலியார் இயற்றிய நூல்களை வாங்கிப் படித்துப்பாருங்கள். அந்நூல்கள் வருமாறு:—

		ரூ.	அ.
பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை	....	2	0
தமிழ்த் தென்றல்	....	2	0
முருகன் அல்லது அழகு	....	1	0
இராமலிங்கசுவாமிகள் திருவுள்ளம்	....	0	12
மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்	....	2	8
என்கடன் பணிசெய்து கிடப்பதே	....	0	8
சைவத்தின் சமரசம்	....	0	8
சைவத்திறவு	....	0	8
கடவுள் காட்சியும் தாயுமானாரும்	....	0	4
தமிழ் நூல்களில் பௌத்தம் ...	....	0	4
சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து	....	0	8
நாயன்மார்	....	0	3
சைவ சமய சாரம்	....	0	1
இமயமலை அல்லது தியானம்	....	0	6
தமிழ்நாடும் நம்மாழ்வாரும்	....	0	4
உரிமைவேட்கை அல்லது நாட்டுப்பாடல்....	....	0	4
முருகன் அருள் வேட்டல்	....	0	4

இந்நூல்கள் எல்லாவற்றையும் ஒரே காலத்தில் வாங்குவோர்க்குத் தபாற்செலவின்றி மணியார்டர் கமிஷன் கழித்து வி.பி.-யில் அனுப்பப்படும்.

முருகவேள் புத்தகசாலை,
12, கணபதிமுதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்துப் பிரசுரங்கள்

		ரூ.	அ.
ஸ்ரீ ராமகிருஷ்ண தேவரின் திவ்ய சரிதம் (விரிவானது)	...	5	0
ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம் (சுருக்கம்)	...	0	8
ஸ்ரீ ராமகிருஷ்ண வசனாமிருதம்	...	1	8
ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் 1003 உபதேச மொழி	...	1	6
குருதேவர் வாக்கியம் ...	...	0	5
நமது தாய்நாடு ...	...	0	8
பக்தியோகம் ...	...	0	10
கர்மயோகம் ...	...	0	12
சிகாகோ பிரசங்கம் ...	...	0	5
விவேகானந்தரின் கடிதங்கள்	...	0	8
எனது போர் முறை ...	...	0	2
பவாஹாரி பாபா ...	...	0	3
ஜகஜ்வபர விளக்க வினாவிடை	...	0	13
பக்தி மார்க்கம் ...	...	0	2
முத்திநெறி ...	...	0	5
எல்லாவற்றிலும் இறைவனைக் காணல்		0	2

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,

மயிலாப்பூர், சென்னை.

கன்றுங் கனியுதவும்

பண்டிதர் - எல். உலகநாத பிள்ளை அவர்கள்

இயற்றியது

விலை அணா. 10.

முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை.

பாம்பன் :

ஸ்ரீமத்-குமரகுருதாச சுவாமிகள்

இயற்றிய நூல்கள்

	ரூ.	அ.
சிவஞானதீபம் 2-ஆம் பதிப்பு	0	8
ஸ்ரீ சுப்பிரமணிய வியாசமும் குருசிசம்பவ வரலாற்று வியாசமும் 1-ஆம் பதிப்பு.	1	0
வேதவிபாசம்	0	10
சீவயாதனுவியாச மூலமு முரையும் 2-ஆம் பதிப்பு.	0	11
பத்துப் பிரபந்தம்	0	7
தகராலய ரகசியமும், உரையாகிய சதானந்த சாகரமும்	2	8
பரிபூரணானந்த போதமும் உரையாகிய சிவசூரியப் பிரகாசமும்	2	0
சுத்தாத்வைத நிர்ணயம்	0	3
திருப்பாவும், உரையாகிய திட்பமும், குறிப்புரையும்	10	0
ஸ்ரீமத் குமாரசுவாமியம்	5	0
செக்கர்வேள் செம்மாப்பும், செக்கர்வே ளிறுமாப்பும்	0	6
சிறுநூற்றிரட்டு 6-ஆம் பதிப்பு	0	6
குமாரவேள் பதிற்றுப்பத் தந்தாதி 3-ஆம் பதிப்பு	0	2
குமரகுருதாச சுவாமிகள் பாடல் திருவலங்கற்றிரட்டு 1-ஆங்கண்டம் திருவலங்கற்றிரட்டு 2-ஆங் கண்டம் முதலியன அடங்கிய நூல்	3	8
அமைதி வைபம்பெத்தன்னுஞ் சேந்தன் செந்தமிழ்	0	2
சண்முக சகச்சிரநாமார்ச்சனை	0	4
செவியறிவுறூஉ	0	1½
ஷை காலிகோ பைண்டு	0	2½
பாம்பன் : ஸ்ரீமத் - குமரகுருதாச சுவாமிகள் சரித்திரம்	0	8
ஷை சரித்திரம் காலிகோ	0	12

ஜோதிட நூல்கள்

	ரூ.	அ.
சர்வ சோதிட சஞ்சீவி ...	1	8
சிற்பநூற் பொக்கிஷம் ...	1	0
சோதிட பாரா சாரியம் ...	0	12
உடுதசாபிரதீபிகை	0	12
வீமேசுர உள்ள முடையான் 2-ம் பாகம்	1	0
வான சேகர சப்தகேள நீபம் ...	2	0
சோதிடக் கன்ம காண்ட மூலமும் உரையும்	0	6
ஜோதிட ஆசிரியன் 1, 2, 3, 4 பாகங்கள் தனித்தனி ...	1	0
அங்க பலன் ...	1	0

வைத்திய நூல்கள்

	ரூ.	அ.
புலஸ்தியர் கற்பம் 300 ...	1	0
அகஸ்தியர் பன்னிருகாண்ட வைத்தியம் 200	0	12
அகஸ்தியர் அமுத கலைஞானம்	1	4
அகஸ்தியர் வைத்திய ரத்தினச் சுருக்கம் 360	0	12
இராம தேவரென்ற யாகோபு சுண்ண சூஸ்திரம் 155 ...	0	12
,, லோகச் செந்தூரம் 300-க்கு சூஸ்திரம் 150 ..	0	10
,, லோகச் செந்தூரம் 300 ...	0	12
,, பஞ்ச மித்திரம் 300 ...	0	14
,, வாத வைத்தியம் 300 ...	0	14
,, வாத சூஸ்திரம் 400 ...	1	4
,, தண்டகம் 100 ...	0	12
,, வைத்திய சூஸ்திரம் 150	0	10
,, வைத்தியம் 300 (மருந்து சுத்தியும் நாடி விவரமும்)	0	14
,, சுண்ணம் 600 ...	1	8
,, வைத்திய சிந்தாமணி 700	1	8
,, வைத்திய கல்லாடம் ...	1	4
,, சுண்ணம் 300 ...	0	14
சித்த வைத்திய அகராதி ...	2	8
திருவள்ளுவர் பஞ்சரத்தினம் ...	2	0
பதினெண் சித்தர்கள் வைத்திய வாதயோக ஞான சாஸ்திரத் திரட்டு	1	8
அகஸ்திய முனிவர் பூரண சூஸ்திரம்	0	12
இராம தேவர் சிவயோகம் ...	0	8
அகஸ்திய முனிவர் கற்பமுப்புக் குருநூல் 100-ம் மனோன்மணி தீட்சை 100-ம்	0	12
கருவூரார் வாதகாவியம் 700 ...	1	0
சட்டை முனிவர் ஞானம் ...	0	4
அகஸ்தியர் வைத்திய பூரணம் 205	0	12
நந்தீஸ்வரர் நிகண்டு	0	12
விஷ வைத்திய மாத்திரை ஒன்பது விஷ அருடம்	2	8
அகஸ்தியர் இரண வைத்தியம் 134 முறைகள்	0	12
அகஸ்தியர் நயனவிதி 1500 உரை காசமுனிவர் 200	1	4

முருகவேள் புத்தகசாலை,

இராயப்பேட்டை, சென்னை.

ஜெகப் பிரசித்திபெற்ற

காமினியா சோப்புகள்

காமினியா வைட்ரோஸ் சோப்

உண்மையாக இந்த உயர்ந்த சோப், அதனுடைய ரோஜா புஷ்பங்களின் வசீகரமான வாசனையால் உங்களை ஆச்சரியப்படும்படி செய்யும். 3 கட்டிகள் உள்ள ஒரு பெட்டியின் விலை ரூபா 1.

காமினியா சந்தண சோப்

சந்தனக் கட்டையைப்போன்ற வாசனையையும், பலரும் விரும்பும்படியான வாசனையையும் கொடுக்கிறது. இது முரடான சருமத்திற்கு மிகவும் நன்மை பயக்கக் கூடியது. 3 கட்டியுள்ள ஒரு பெட்டியின் விலை ரூபா 1.

காமினியா லவண்டர் சோப்

இச்சிறந்த சோப்புகள் உயர்ந்த சாமான்களால் சிறந்த முறையில் தயாரிக்கப்படுவன; மிகேரம்மியமான வாசனை வீசுவன; தேகத்திற்கு அழகையும் மனதிற்கு மகிழ்ச்சியையும் அளிப்பன. அழகை விரும்புவோர்க்கு இது ஒரு வரப்பிரசாதம் போன்றது. 3 கட்டி உள்ள ஒரு பெட்டியின் விலை ரூபா 1.

டில்பகார் சோப்

சருமத்திற்கு வேண்டிய ரஸாயன முறைப்படி உள்ள வஸ்துக்கள் நிரம்பிய ஒரு பரிசுத்தமான சோப். இதன் அதியற்புத குணத்தை விஸ்தரிக்க முடியாது. இதனுடைய சௌரபமான புஷ்ப வாசனையால் ஸ்நான அறையை நந்தவனம்போல் செய்கிறது. இன்று மாத்திரம் இந்த உயர்ந்த டில்பகார் சோப்பைப் பரிக்ஷியுங்கள். 3 கட்டி உள்ள ஒரு பெட்டியின் விலை ரூபா 1.

வி. பி. தபால் செலவு பிரத்தியேகம்

மதராஸ் டிஸ்டிரிப்யூட்டர்கள் :—

ஜே. என். சேட் & கோ,

நெ. 68, டைக்ராப்ட்ஸ் வீதி, திருவல்லிக்கேணி, சென்னை.

தயாரிப்பவர்கள் :—

The Anglo-Indian Drug & Chemical Co., Bombay, 2.

Edited & Published by T. V. Kalyanasundaran; Printed by T. V. Volaganathan at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah, Madras.